Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, DECEMBER 09, 2022

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 09, 2022 | ஒளி: 08 கதிர்: 161 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## தமிழ் அரசியல் கைதிகள் சகலருக்கும் பொங்கலுக்கு பொதுமன்னிப்பு வழங்குக

பா.நிரோஸ்

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்தாது, அவர்களை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனத் தெரிவிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தோட்டப்பகுதியில் ஏழ்மை நிலை அதிகரித்துள்ளது என்பதையாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு ஆகியவற்றுக்கான நேற்றைய (08) குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டின் ஏழ்மைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் கேள்விகளை முன்வைத்து உரையாற்றியிருந்தார். இதற்கு அரசாங்கம் பதில் வழங்குவதாகக் கூறியுள்ளது. தோட்டப் பகுதியில் ஏழ்மைநிலை 51 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சி தலைவருக்கு அரசாங்கம் வழங்கும் பதிலில் தோட்டப் பகுதிகளில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்பதையும் கூற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2





# மினி சூறாவளியால் இருவர் பலி, மூவர் காயம்

### ஊவாவில் 26 பாடசாலைகளுக்கு பூட்டு

எஸ்.கணேசன்,ஆ.ரமேஸ், ராமு தனராஜா, நடராஜா மலர்வேந்தன்

மலையகத்தின் பல பிரதேசங்களிலும் வீசிய மினி சூறாவளியால் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல இடங்களிலும் ஆங்காங்கே பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், பாரிய மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் மீதும் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

கடும் காற்றால் நுவரெலியா மாவட்டம் வலப்பனை, உடப்புஸலாவை, ருப்பஹா, கந்தப்பளை ஆகிய பல இடங்களில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

நுவரெலியா மற்றும் வலப்பனை பிரதேசத்தில் புதன்கிழமை (07) இரவு முதல் பலத்த காற்று வீசுகின்ற அதேவேளை கடுமையான குளிரும் நிலவுகிறது.

வலப்பனை பிரதேசத்தில் ருப்பஹா, மடுல்ல, உடப்புஸலாவை, கல்கடப்பத்தனை, தெரிப்பே, ஹரஸ்பெத்த, இராகலை, புருக்சைட், கந்தப்பளை ஆகிய பிரதேசங்களில் வீசும் கடும் காற்றால் வீதியோரங்களில் பாரிய மரங்கள் சரிந்து போக்குவரத்துக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## மின் கட்டண அதிகரிப்பு தீர்மானத்தை நீக்கவும்

மின் கட்டணத்தை மேலும் அதிகரிக்கும் தீர்மானத்தை நீக்கிக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று (08) வியாழக்கிழமை நிலையியல் கட்டளையின் கீழ் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## டிசெம்பர் இறுதி வாரத்தில் வேட்புமனு திகதி அறிவிப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் திகதியை டிசெம்பர் இறுதி வாரத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா, வியாழக்கிழமை (08) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கசினோ சட்டமூலத்துக்கு நிபந்தனையுடன் அனுமதி



கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மற்றும் கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் விதிமுறைகளுக்கு இரண்டு நிபந்தனைகளுடன் அரச நிதிக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக அரச நிதிக்குழுவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி எம். பியுமான ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அரச நிறுவனங்களின்

## நட்ட சுமையை மக்கள் மீது சுமத்த முடியாது

பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கை அடிப்படையில் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை தனியார் மயப்படுத்துவதாக கூற முடியாது என்றும் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, நட்டமடையும் அரச நிறுவனங்களின் சுமையை மக்கள் மீது தொடர்ந்தும் சுமத்த முடியாது என்று தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## சிகரெட் மீதான வரியை ஏன் அதிகரிக்கவில்லை



அத்தியாவசிய சேவை, தேவைகளுக்கு வரி விதிக்கும் அரசாங்கம், சிகரெட்டின் விலையையும், சிகரெட் உற்பத்தி நிறுவனங்கள் மீதான வரியையும் அதிகரிக்க வில்லை என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம். பியான சந்திம வீரகொடி கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2

## 7 கட்சிகள் அரசியல் கட்சிகளாக அங்கிகாரம்

2022ஆம் ஆண்டு அரசியல் கட்சிகளாக செயற்படுவதற்கு தங்களுக்கும் அங்கிகாரமளிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு 7 கட்சிகளுக்கு அங்கிகாரம் தேசிய தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இரண்டாம் தலைமுறை கட்சி, சிறிலங்கா சமூக ஜனநாயக கட்சி, நாட்டுப்பற்றாளர் ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் அறிவுசார் முன்னணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை

## தனி ஆங்கில மொழி வர்த்தமானி இரத்து

### அடுத்தவாரம் யோசனை முன்வைக்கிறார் விஜயதாஸ

சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானியை இரத்துச்செய்யும் வகையில், அடுத்த வாரம் சபையில் யோசனை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (08) உரையாற்றிய போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானியை மூன்று வருடங்களுக்கு பின்னர், நடைமுறைப்படுத்துமாறு தான் விடுத்த கோரிக்கையை, நீதி கல்விச் சபை நிராகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## 2023 பட்ஜெட் நிறைவேறியது

2023 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் 43 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 80 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் பிரதம நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகிய இருவருமே வாக்களிப்பில் கலந்துகொள்ள வில்லை

# பல நகரங்களில் வளி மாசடைவு

### முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்தல்



கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் அதிகளவு வளி மாசடைவதால் அவதானமாக இருக்குமாறு சுற்றாடல் அமைச்சு பொதுமக்களிடம் கோரியுள்ளது.

சுவாசம் மற்றும் இதய நோய்கள் உள்ள குழந்தைகள், முதியவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளின் போது முகக்கவசத்தை அணிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வங்காள விரிகுடாவில் 'மண்டோஸ்' மையம்

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமை (08) மாலை வரையான கடந்த 4 நாள்களாக கடும் குளிருடன் கூடிய வானிலை நிலவி வருவதோடு, ஓரளவான மழையும், பலத்த சுழல் காற்றும் வீசிவருதை அவதானிக்க முடிகிறது.

பலத்த சுழல் காற்றால், மாவட்டத்தின் பல இடங்களிலும், மரங்கள் முறிந்துள்ளதையும், மக்களின் இயல்பு வாழ்வில் சற்று தளம்பல் நிலைமை ஏற்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது.

தொடர்ச்சி P2

# மீண்டும் சேனா

பொலன்னறுவை மாவட்டத்தில் சோளப் பயிர்களை சேனா புழு தற்போது சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். பலுகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 2,500 ஏக்கருக்கும் அதிகமான பயிர்செய்கை சேனா புழுக்களால் நாசமாகியுள்ளது. பலுகஸ்வெவ பிரதேசத்தில் சோளச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு 3, 4



மாதங்கள் கடந்துள்ள போதிலும் சேனா புழு காரணமாக செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மின் கட்டண அதிகரிப்பு போதாது; மீண்டும் அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை

### கையை விரித்தார் ரணில்

பா.நிரோஸ்

ஓகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது போதாது. எனவே மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர மாற்று வழியில்லை எனத் தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அதிகாரம் அமைச்சருக்கும் அமைச்சரவைக்குமே இருக்கிறது எனவும் தெரிவித்தார். நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் மீதான எம். பிக்களின் கேள்விகளுக்கு விளக்கமளித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள காணிகளை பிரதேச செயலாளர் ஊடாகப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்கள் தொடர்பில் சபையில் பேசப்படுகிறது. பிரதேச செயலாளர், தான் விரும்பியவாறு காணிகளை பிரித்துக்கொடுக்க முடியாது. இதற்கென குழு ஒன்று அமைக்கப்படும்.

அதுபோல, அரச சார்பற்ற பல்கலைக்கழகங்கள் அமைப்பது தொடர்பில் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் தீர்மானத்துக்கு வரும் பட்சத்தில் ஜனவரிக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களை அமைக்க முடியும்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தமிழ் அரசியல் கைதிகள் சகலருக்கும் பொங்கலுக்கு பொதுமன்னிப்பு வழங்குக

உணவுப்பாதுக்காப்பும் தோட்டப் பகுதிகளில் 53 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவற்றை நாம் கூறவில்லை உலக வங்கியே கூறுகிறது. இலங்கையில் தோட்டப் பகுதிகளில் உள்ளவர்களே ஏழ்மையில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் அவர்களின் ஏழ்மை நிலைமை இன்னும் அதிகரித்துள்ளது என்றார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு -செலவு திட்டத்தில் இந்த விடயத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக எதனையும் குறிப்பிடவில்லை. நாட்டின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு விசேட நிவாரணங்களை வழங்கும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பது எமக்குத் தெரியும். ஆனால், ஆகக் குறைந்தது தோட்டப் பகுதிகளில் ஏழ்மை நிலைமை அதிகரித்துள்ளது என்பதையாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் நாட்டில் ஏற்படும் மாற்றங்கள் முற்போக்கானதாக இருக்க வேண்டும். குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இதன்படி, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சிறைச்சாலையில் வெறும் 40 தமிழ் கைதிகளே இருப்பதாகக் கூறியுள்ளதோடு அவர்களின் வழக்குகளை விரைவுப்படுத்தி விசாரணை செய்வதாகவும் கூறியிருக்கிறார்.

வழக்குகளை விரைவுப்படுத்தாது, அவர்கள் அனைவரையும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும். தீபாவளித் தினத்தன்று சில தமிழ் கைதிகளை ஜனாதிபதி விடுவித்ததுபோல பொங்கலுக்கும் இவர்களை விடுதலை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், கொழும்பு நகர்புறத்தில் உள்ள ஏழ்மைநிலையில் உள்ளவர்களுக்கு சமூர்த்திக் கொடுப்பனவுகள் முறையாகக் கிடைப்பதில்லை. எனவே, மின்சாரக் கட்டணத்தின் அடிப்படையில் சமூர்த்திப் பயனாளிகளை கொழும்பு நகர் புறங்களில் தெரிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மினி சூறாவளியால் இருவர் பலி, மூவர் காயம்

இராகலை புருக்சைட் பகுதியில் வீதியில் பயணித்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின் மீது மரம் வீழ்ந்து விபத்துக்கு உள்ளான நிலையில் ஓட்டோவில் பயணித்த ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி இரத்த வெள்ளத்தில் உயிரிழந்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ சாரதி உட்பட மூவர் பலத்த காயங்களுடன் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

உடப்புஸ்ஸல்லாவ கல்கட பத்தனையில் வீடு மீது பாரிய மரக்கிளை வீழ்ந்து ஒருவர் நேற்று (08) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

வலப்பனை-நில்தண்டாஹின்ன ரூப்பஹா, உடப்புஸலாவை -மடுல்ல பிரதேச பிரதான வீதிகளில் பாரிய மரங்கள் வேருடன் சரிந்து மின் கம்பங்களும் முறிந்துள்ளன.

வீதி போக்குவரத்தை சீர்செய்ய அங்கு மரங்களை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால் இப்பிரதேசத்திற்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், வலப்பனை பிரதேசத்திற்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

மேலும் உடப்புஸ்ஸல்லாவ- மெத்திவரன நிவாச பகுதியில் வீடொன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வலப்பனை பிரதேசத்தில் வீசும் பலத்த காற்றால் அனர்த்தங்கள் பல இடம்பெற்று வருகின்றன.

பாரிய மரங்கள் காணப்படும் இடங்களில் வசிப்போர் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் கந்தப்பளை -இராகலை வீதியில் கொங்கோடியா பகுதியில் பிரதான வீதியில் முறிந்து வீழ்ந்த மரத்தை அகற்றும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், இராகலை உயர் நிலை பாடசாலையின் கட்டடம் ஒன்றின் மீது பாரிய மரம் வீழ்ந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டடத்தில் பயிலும் உயர்தர மாணவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கு பாதிப்பில்லை என பாடசாலை அதிபர் தெரிவித்தார். இந்நிலையில், ஊவா மாகாணத்தில் 26 பாடசாலைகளுக்கு தற்காலிகமாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## பல நகரங்களில்...

அமெரிக்காவின் காற்றின் தர சுட்டெண்ணின் படி இலங்கையின் பல பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்றதாக உள்ளது. கொழும்பு -249, யாழ்ப்பாணம்- 280, குருநாகல் - 291, வவுனியா - 251, கண்டி - 214; பாதுகாப்பான நிலை 150-க்கும் குறைவாக இருக்க வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு, வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள 'மண்டவுஸ்' சூறாவளி அழுத்தம் காரணமாக இந்தியாவில் இருந்து தூசி, துகள்கள் அள்ளிக்கொண்டு வருவதால், நாட்டின் வாயுமண்டத்தில் தூசிகளின் படிவுகள் அதிகரித்துள்ளன.

தற்போது நாட்டில் பாதிப்பை ஏற்படுத்திவரும் இந்தப் புயல், தமிழகம், புதுச்சேரி, தெற்கு ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இன்று (09) கரையைக் கடக்க உள்ளதாகவும், அதன் மூலம் புழுதி நிலை படிப்படியாக மறைந்துவிடும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. இலங்கையின் பல நகரங்களில்,காற்றின் தரச்சுட்டெண் 150 - 200 வரை காணப்படுவதாகவும் இது ஆரோக்கியமற்ற நிலை என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

காற்றின் தரச்சுட்டெண் என்பது, இந்த மாசுபாடுகள் தரை மட்ட ஓசோன், துகள் மாசுபாடு, கார்பன் மோனாக்சைட், சல்பர் டை ஒக்சைட் மற்றும் நைட்ரஜன் டை ஒக்சைட் ஆகிய ஐந்து முக்கிய காற்று மாசுபடுத்திகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

காற்றின் தரம் ஆரோக்கியமற்ற அல்லது சிவப்பு வரம்பில் (151-200) இருந்தால் அல்லது குறைந்தால், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட நேரம் வெளியில் வேலை செய்வதையோ அல்லது செயற்பாடுகளையோ தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் உள்ளவர்கள் வெளிப்புறங்களில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வளி மாசடைதல் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரித்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், வீடுகளிலிருந்து வெளியே செல்லும் சந்தர்ப்பங்களில் முகக்கவசத்தை அணியுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வங்காள விரிகுடாவில்...

இந்நிலையில் தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற் பிராந்தியத்தில் காணப்பட்ட ஆழ்ந்த தாழமுக்கமானது, புதன்கிழமை (07) இரவு 11.30 மணியளவில் சூறாவளியாக தீவிரமடைந்துள்ளதுடன் அதற்கு 'மண்டோஸ்' என பெயரிடப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து கிழக்காக 370 கிலோ மீற்றர் தூரத்திலும், நெட்டாங்கு 9.2 பாகை வடக்காகவும், அகலாங்கு 84.6 பாகை கிழக்காகவும், சூறாவளி மையம் கொண்டுள்ளது.

இப்புயல் மேற்கு, வடமேற்குத்திசையில் நகர்ந்து வட தமிழ்நாடு புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திரப் பிரதேசக் கரையை 9 ஆம் திகதி இரவு ஊடறுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் தாக்கத்தின் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில், மேகமூட்டமான வானம் காணப்படும்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். வட மாகாணத்திலும், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில், 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மணிக்கு 50 தொடக்கம், 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று அவ்வப்போது வீசக்கூடும். மேல் மாகாணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது சிறிதளவு மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மன்னார் முதல் காங்கேசங்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களிலும், தென்மேற்கு வங்காள விரிகுடா கடற் பிராந்தியங்களிலும், மீனவ சமூகத்தினரும் கடலில் பயணம் செய்வோரும், நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ள ப்படுகின்றார்கள்.

## மின் கட்டண...

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மின்சார கட்டணத்தை இரண்டு தடவைகள் அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவையால் அறிவிக்கப்படடுள்ளது. இது பாடசாலை மாணவர்களின் பரீட்சைகளுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இது பற்றி தமக்கு தெரியாது என்றும் கூறியுள்ளது.

உண்மைகளை ஆட்சியாளர்கள் அறியாவிட்டாலும் மக்கள் மிகவும் துன்பத்தில் இருக்கின்றனர். இவ்வாறான நேரத்தில் மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் யோசனையை நீக்கிக்கொண்டு, கட்டண அதிகரிப்பை செய்ய மாட்டோம் என்று அறிவியுங்கள் என்றார்.

## டிசெம்பர் இறுதி...

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் தெரிவு செய்யப்படவுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் டிசெம்பர் 08 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உள்ளூராட்சி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் இரண்டையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நடத்த வேண்டும் என பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளுக்கு மத்தியில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒருவருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நஷ்ட சுமையை...

பாராளுமன்றத்தில் நேற்று (08) மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், "நஷ்டமடையும் அரச நிறுவனங்கள் 8 அம்ச அடிப்படையில் மறுசீரமைக்கப்படவுள்ளன. இந்த மறுசீரமைப்பு என்பது தனியார் மயப்படுத்தல் அல்ல.

இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. 49 க்கும் அதிகமான அரச நிறுவனங்களின் நஷ்டம் திறைச்சேரி ஊடாக முகாமைத்துவம் செய்யப்படுகிறது. இந்த நஷ்டத்தை நாட்டு மக்கள் மீது தொடர்ந்தும் சுமத்த முடியாது

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் போது வெளிப்படைத்தன்மை, மக்களுக்கான சேவை நலன்புரி சேவை உறுதிப்படுத்தல்,தொழிலாளர்களின் தொழில் மற்றும் தொழில் உரிமை பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களில் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படும்.

ஒரு நிறுவனம் பல கட்டமாக பிரித்தல், ஒரு சேவை அடிப்படையில் செயற்படும் நிறுவனத்தை ஒன்றிணைத்தல், முகாமைத்துவ அதிகாரத்தை அரசாங்கத்திடம் பொறுப்பாக்கல், ஒழுங்குப்படுத்தலை தனியாருக்கு வழங்கல், முகாமைத்துவத்தை தனியாருக்கு வழங்கி ஏனைய சேவைகளை அரசாங்கம் முன்னெடுத்தல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் மறுசீரமைக்கப்படவுள்ளன.

மேலும், பங்கு அடிப்படையில் அல்லது முழுமையாக குத்தகை அடிப்படையில் வழங்கல், அரச நிறுவனங்களின் 49 பங்குளை பிற தரப்புடன் ஒன்றிணைத்தல், வெளிப்படை தன்மையுடன் நிறுவன கட்டமைப்பை நிர்வகித்தல் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படவுள்ளன" என்றும் அவர் தெரிவித்தார்.

## கசினோ சட்டமூலத்துக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று (08) அரச நிதிக்குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழே கசினோ நிறுவனங்கள் கண்காணிக்கப்படுகின்ற போதும், இலங்கையில் அவ்வாறான அதிகாரசபை இல்லை.

கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மற்றும் கசினோ வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் விதிமுறைகள் அரச நிதிக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**வாக்குறுதியை எழுத்து மூலம் பெற்றுக்கொண்டு உள்ளதுடன், நடவடிக்கையை மேற்கொள்கின்றார்களா எனப் பார்ப்பதற்காக நாங்கள் மாதாந்தம் அதன் முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் கண்காணித்து வருவோம்**

அப்போது, அதிகாரசபையை அமைக்குமாறு தெரிவித்தமைக்கு, இரண்டு வருட கால அவகாசம் கேட்டிருந்தனர். என்றாலும் இந்தளவு நீண்டகாலம் வழங்க முடியாது என தெரிவித்து இரண்டு தடவைகள் குறித்த சட்டமூலத்துக்கு அனுமதி வழங்குவதை மறுத்தோம்.

**அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியே ஆக வேண்டும். அதுதொடர்பான கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்**

நாட்டில் கசினோ சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனை கண்காணிப்பதற்கும் 2023 செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் கசினோ ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அமைப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலும் அரசாங்கத்தின் தேவையை கருத்தில் கொண்டும் இரண்டு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அவர்களின் இந்த வாக்குறுதியை எழுத்து மூலம் நாங்கள் பெற்றுக்கொண்டு உள்ளதுடன், நடவடிக்கையை மேற்கொள்கின்றா ர்களா எனப் பார்ப்பதற்காக நாங்கள் மாதாந்தம் அதன் முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் கண்காணித்து வருவோம். அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியே ஆக வேண்டும். அதுதொடர்பான கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

## 7 கட்சிகள் அரசியல்...

இக் கட்சிகள் எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சிகளாக செயற்பட முடியுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிகேவா தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையில் அங்கிரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 86 ஆக அதிகரித்துள்ளது.

## தனி ஆங்கில மொழி வர்த்தமானி இரத்து

எனினும் முன்னர் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானியை பாராளுமன்றத்தின் ஊடாக இரத்துச்செய்ய முடியும் என்றும் அதற்கிணங்க, வர்த்தமானியை இரத்துச்செய்யும் வகையில் அடுத்த வாரம் யோசனை ஒன்றை முன்வைக்கவுள்ளதாகக் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் மற்றும் ஏனைய தரப்புகள் தொடர்ந்தும் விடுத்து வரும் கோரிக்கைக்கு இணங்கவே இலங்கையின் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானியை இரத்துச் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## சிகரெட் மீதான...

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு மேம்பாடு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று (08) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், "2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நடைமுறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் எவ்வித திட்டங்களையும் உள்ளடக்கவில்லை. வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டுமானால் தேசிய வளங்களை தனியார் மயப்படுத்த வேண்டும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது.

தேசிய வளங்களை தனியார் மயப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளை அரசு பொறுப்பேற்க வேண்டும். அரச வருமானத்தை 63 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்ளும் அரசின் இலக்கு வரி அதிகரிப்பை மாத்திரம் மையப்படுத்தியதாக காணப்படுகிறது.

வரி அதிகரிப்பு ஒட்டுமொத்த மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வரி செலுத்த வேண்டிய தரப்பினரிடமிருந்து முறையாக வரி அறவிட்டால் நடுத்தர மக்கள் மீது சுமை சுமத்த வேண்டிய தேவை ஏற்படாது" என்றார்.

## மீண்டும் சேனா

சேனா புழுவானது, சோளச் செடியின் பொத்திகளைத் தின்று செடியையே அழித்து விடுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## மின் கட்டண...

மின்சாரக் கட்டணம் கடந்த ஒகஸ்ட் மாதம் அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதுபோதாது. இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கை மின்சார சபை 152 பில்லியன் ரூபாய் நட்டமடைய உள்ளது. 2013ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் 300 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அடுத்த வருடம் வழமையான மின்சார உற்பத்திக்கு மேலதிகமாக 420 பில்லியன் ரூபாய் தேவைப்படுகிறது. அடுத்த வருடம் சாதாரணமாக மழைப் பெய்யுமாக இருந்தால் 352 பில்லியன்களும், அதிகள மழை பெய்து வெள்ளம் நிலைமைகள் ஏற்பட்டால் 295 பில்லியன்களும் தேவைப்படுகிறது.

அரசாங்கத்துக்கென வருமானம் இல்லாத நிலையில் இந்தப் பாரிய நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது? நாணயத்தாள்களை மீள அச்சிடுவதா? அப்படியென்றால் ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையும். இல்லை வற் வரியை அதிகரிகப்பதா? வற் வரியை அதிகரித்துக்கொண்டிருந்தால் பொருட்களின் விலைகளும் தொடர்ந்து அதிகரிக்கும்.

எனவே, மூன்றாவதாக எமக்குள்ள ஒரே தீர்வு மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது மட்டுமே. மின்கட்டணத்தை அதிகரிக்காது மின்சாரத் துண்டிப்புகளுக்கு செல்லலாம். ஆனால், அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் கல்வில் பொதுத் தரா தர உயர் தரப் பரீட்சைகள் நடைபெறும். எனவே மின்துண்டிப்புக்கு செல்வதில் எனக்கு விருப்பம் இல்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளியில் இருந்து எமக்கு நிவாரணங்கள் கிடைப்பதில்லை. எனவே விருப்பமின்றியேனும் மின் கட்டணத்தை அதிகரித்தே ஆக வேண்டும்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அதிகாரம் அமைச்சரவைக்கும், அமைச்சருக்குமே இருக்கிறது என்றார்



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

## வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின்

# ஆலோசனைகள் கோரப்படுவதில்லை

தேசிய கொள்கை வகுத்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பு கிடையாது. தேசிய கொள்கை வகுப்பில் தெற்கு அரசியல் கட்சிகள் முன்னிலையில் இருந்து செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் கோரப்படுவதில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண வேண்டுமானால் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த வகையில் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும். ஆனால், தேசிய கொள்கை வகுத்தலில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பங்களிப்பு கிடையாது. தேசிய கொள்கை வகுப்பில் தெற்கு அரசியல் கட்சிகள் முன்னிலையில் இருந்து செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகள் கோரப்படுவதில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆகவே தமிழ்த் தரப்பினர் அரசியல் கட்சி பேதங்களை விடுத்து, அரசியல் தீர்வு விடயத்தில் நியாயமான தீர்வைக் காண ஒன்றுபட வேண்டும்.

அரசியல் தீர்வு சமஷ்டி முறை கட்டமைப்பை கொண்டதாக காணப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. மாகாண சபை தேர்தல் ஊடாக அதிகாரம் பகிரப்பட்டு, அரசியலமைப்பின் ஊடாக அதிகாரம் பகிரப்பட்டால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்கு வரும் போது அவர்களுக்கு உள்ள தடைகள் நீக்கப்பட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டுமானால் நாட்டில் நியாயமான



### அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட போது, பொருளாதார நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு எட்டப்பட்டு, வரிசை யுகம் கட்டம் கட்டமாக முடிவுக்கு கொண்டு வரப்படும் என மக்கள் எதிர்பார்த்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது. நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண பிரதமர் உட்பட அமைச்சரவை ஒத்துழைப்புடன் செயற்படுகிறது என்பதை குறிப்பிட வேண்டும்.

நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் முறையாக செயற்படுத்தப்படவில்லை. நாட்டில் பணவீக்கம் தற்போது குறைவடைந்துள்ளது. இருப்பினும் அத்தியாவசிய பொருட்களின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஒருகாலத்தில் மீன்பிடி மற்றும் உற்பத்தி கைத்தொழில் முன்னேற்றமடைந்திருந்தது. மொத்த மீன்பிடியில் மூன்றில் இரண்டு பங்கு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த முன்னேற்றம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டது. இருப்பினும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் இந்தத் துறைகள் மீள கட்டியெழுப்பப்படவில்லை. நாட்டின் உற்பத்தி துறைகள் முறையாக மறுசீரமைத்தால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியும் என்றார்.

## இருவருக்கும் அருகருகே கொள்ளையர்கள் உள்ளனர்

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோருக்கு அருகிலும் அவர்களுக்குப் பின்பக்கமாகவும் கொள்ளையர்களே அமர்ந்துள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வர்த்தகர்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைமைக்கு வந்துள்ளனர். பதுளையில் சிறப்பாக வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்த வர்த்தகர் ஒருவர், நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளால் அவரது சொத்துகளை வங்கியில் வைத்து கடனைப் பெற்றுகொண்டுள்ளார். இவ்வாறான நிலையில் தற்போது அவரது வீடு உள்ளிட்ட சொத்துகளை வங்கி ஏலத்தில் விடுவதற்கு தயாராகியுள்ளது என்றார்.

இதுபோன்ற வர்த்தகர்கள் வங்கிகளை ஏமாற்றுபவர்களோ கொள்ளையர்களோ கிடையாது. ஜனாதிபதி, பிரதமரின் இரு பக்கங்களும், அவர்களுக்குப் பின்னாலும் கொள்ளையர்கள் அமர்ந்திருக்கிறார்கள். வங்கிக்கடனைப் பெற்று செலுத்த முடியாத நிலைக்கு வந்துள்ள, பதுளை வர்த்தகர் போன்ற இன்னும் பலர் இவர்களைப் போன்ற கொள்ளையர்கள் அல்லர். உண்மையில் அவர்கள் நேர்மையானவர்கள் எனவும் தெரிவித்தார்.

எனவே, பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கு சொத்துகளை வங்கிகள் உடமையாக்கிக் கொள்வது தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டும் எனவும் இதன்போது அநுரகுமார எம்.பி கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச தொழில்களை வழங்கியுள்ளது. நல்லாட்சிக் காலத்தில் டெங்கு ஒழிப்புச் செயலணி உருவாக்கப்பட்டு அதில் 1,500 பேரை இணைத்துகொண்டனர். இவர்களுக்கு வெறும் 20 ஆயிரம் ரூபாய் சம்பளமே வழங்கப்படுகிறது. அதுபோல தற்போதைய அரசாங்கம், அரச தொழில் வழங்கியவர்களுக்கும் 22 ஆயிரம் ரூபாயையே வழங்குகின்றது என்றார்.

## அதிகரிப்பதை கட்டுப்படுத்தவும்

நாட்டில் வறுமை நிலைக்குள் தள்ளப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் போசனை குறைபாட்டால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாகவும் இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் துரித வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் வறுமை நிலைமை அதிகரித்து வருகின்றது. இது பாரதூரமான பிரச்சினையாக மாறியுள்ளது. இந்நிலையில் குடும்ப சுகாதார பணியகத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் நாட்டில் உள்ள 5 வயதுக்கும் குறைவான சிறுவர்களில் 43.4 பேருக்கு போசனை குறைபாடு உள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதற்கு பெருமளவில் பொருளாதார நெருக்கடிகளும் அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களும் நாடு வங்ரோத்து நிலைக்கு சென்றமையும் காரணமாக அமைந்துள்ளன.

இதனால் நாட்டை இந்த நிலைமையில் இருந்து மீட்பதற்காக துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்விகள் சிலவற்றை எழுப்புகின்றேன். பொருளாதா நெருக்கடியால் வறுமைக்குள் தள்ளப்பட்டோரின் சரியான எண்ணிக்கை யாது? வறுமை மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பில் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ள, அரசாங்கம் கணக்கெடுப்பு நடவடிக்கையை எடுக்குமா? சமூர்த்தி கொடுப்பனவால் நன்மையடைந்தவர்கள், எதிர்பார்ப்பு பட்டியலில் இருப்போரின் எண்ணிக்கைகள் யாது? இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை நிலைக்கு முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன என்று கேட்கின்றேன் என்றார்.

## காலஅவகாசம் அசாதாரணமானது

மந்தபோசனை, நாட்டில் ஏழ்மைநிலைக்கு தள்ளப்பட்டவர்கள் உள்ளிட்ட தரவுகள் இல்லாமல் வரவு- செலவு திட்டத்தை எவ்வாறு அரசாங்கம் தயாரித்தது என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த விடயம் தொடர்பில் தான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்க அரசாங்கம் காலஅவகாசத்தைக் கோருவது அசாதாரணமானது எனவும் தெரிவித்தார்.

நாட்டில் தனிநபர் ஒருவர் பெறும் வருமானம் அவரது செலவுகளை ஈடுசெய்வதற்குப் போதுமானதாக இல்லை. நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் 25 சதவீதமானோர் ஏழ்மைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கி கூறுகிறது.

ஆனால், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள செய்த ஆய்வில், ஏழ்மைநிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தில் இருந்து 96 இலட்சமாக அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, ஏழ்மைநிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை, மந்தபோசனையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், சமூர்த்திப் பயனாளிகள் தொடர்பான தகவல்களைக் கோரியும் கேள்வி எழுப்பியிருந்தார்.



இதற்குப் பதிலளித்த சபைமுதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, இக்கேள்விகளுக்கான பதிலை வழங்குவதற்குக் காலஅவகாசம் வேண்டும் என்றார்.

எனினும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித், பொதுவாகக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு அரசாங்கம் காலஅவகாசத்தைக் கோரும் பட்சத்தில் நான் அதற்கு எதிர்ப்பை தெரிவிப்பதில்லை. ஆனால், இப்போது முன்வைத்துள்ள கேள்விகள் தொடர்பான தரவுகள் இல்லாது வரவு- செலவு திட்டத்தை சமர்ப்பித்திருக்க முடியாது. எனவே, இந்த அடிப்படையான கேள்விகளுக்குக் கூட பதிலளிக்க அரசாங்கம் காலத்தைக்கோருவது அசாதாரணமானது என்றார்.

## தனியாருக்கு வழங்குவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

அரசாங்கத்துக்கு சொந்தமான நீர்மின்சாரக் கட்டமைப்புகளை தனியாருக்கு வழங்க வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க, இவற்றை தனியார் மயப்படுத்தினால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் எச்சரித்தார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க கடந்த அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இதன்படி இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டு, அக்குழுவின் யோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த யோசனைகளில் மின்சார சபையை 18 நிறுவனங்களாக பிரிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்உற்பத்திக்காக 6 நிறுவனங்களாக பிரிக்க வேண்டுமெனவும், லக்ஷபான, களனி, மஹாவலி, சமனலவெவ உள்ளிட்ட இலங்கை மின்சார சபைக்கு



சொந்தமான நீர்மின் உற்பத்தி கட்டமைப்புகள், புத்தளம் மின்நிலையம், களனி திஸ்ஸ அனல்மின் நிலையம் உள்ளிட்ட ஏனைய அனல்மின் நிலையங்கள், மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் என 6 நிறுவனங்களாக பிரிப்பதற்கே யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

களனி, மஹாவலி கங்கை ஆகியவை நீர்மின் உற்பத்திக்கு மாத்திரம் உருவாக்கப்பட்டவை அல்ல. இக்கங்கைகள் குடிநீர் தேவை, விவசாய தேவை என்பவற்றையும் பூர்த்தி செய்கின்றன. எனவே இவற்றை நிறுவனங்களாக மாற்றினால் மின்உற்பத்திக்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.

மேற்குறித்த நீர்மின் உற்பத்திநிலையங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஒரு மின் அலகுக்கு 3 ரூபாய் வரையிலேயே செலவு செய்யப்படுகிறது. இதனை தனியார் மயப்படுத்தினால் அதிகவிலைக்குக் கொடுத்து இவற்றிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படும். எனவே, இது தொடர்பில் பாராளுமன்றத்தில் முறையான விவாதம் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## விற்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது



மறுசீரமைப்பு என்ற பெயரில் அரச நிறுவனங்களை விற்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதாக கூறிக்கொண்டு அவற்றை விற்கும் செயற்பாடுகளையே முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். நிறுவனங்கள் நட்டமடைவதாகவே அரசாங்கம் கூறுகின்றது. அவ்வாறு நட்டமடைவதை தடுக்க வீண் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அத்துடன் ஊழல்களை நிறுத்த வேண்டும். இதனை செய்யாவிட்டால் நாட்டை எந்த வழியிலும் முன்னேற்ற முடியாது. அரச நிறுவனங்களை விற்று டொலர் தேடுவதற்கு முயற்சிக்கின்றனர். இது பிரச்சினைக்குரியது என்றார்.

> பாராளுமன்றத்தில் நேற்று (08) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சிலரின் உரைகள்

## பாடசாலை உபகரணங்கள் மீதான வரியை நீக்குக

பா.நிரோஸ்

பாடசாலை உபகரணங்கள், விசேட தேவையுடையோருக்கான பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை உடனடியாக நீக்க வேண்டுமென பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனவரி மாதம் முதலாம் தவணைக்காகப் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன. இதனால் மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டும். ஆனால், பாடசாலை உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியால் பாடசாலை உபகரணங்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன.



அதுபோல, விசேட தேவை உடையோருக்கான பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் வரிகள் அறவிடப்படுகின்றன. இதனால் நாட்டில் உள்ள 5 இலட்சம் விசேட தேவையுடைவர்களும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். எனவே பாடசாலை உபகரணங்கள், விசேட தேவை உடையோருக்கான பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள் வரிகளை நீக்க வேண்டும் என விமல் வீரவன்ச எம்.பி கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, ஜப்பான் நாட்டுக் கடவுச்சீட்டு உலக அளவில் அங்கிரிக்கப்பட்டுள்ளதால் ஜப்பான் நாட்டுப் பயணிகள் சுற்றுலாவுக்காக இரண்டு நாடுகளுக்கு சென்று மூன்றாவது நாட்டுக்கு செல்லும்போது அவர்களுக்கு விசாவுக்குக் கட்டணங்கள் அறிவிடப்படுவதில்லை என்றார்.

ஆனால், உலகிலேயே வடகொரியாவும் இலங்கையும் மாத்திரமே ஜப்பான் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விசாக் கட்டணங்களை அறவிடுகின்றன. இலங்கையில் தற்போது விசாக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. எனவே இதனை புரிந்துகொண்டு இது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்து பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடி, பாடசாலை உபகரணங்களுக்கு வரி அறவிடப்படுவதில்லை. ஆனால் டொலரின் விலை அதிகரித்துள்ளதால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இது நியாயமான விலை அதிகரிப்பே எனவும் தெரிவித்தார்.

மேலும், விசேட தேவையுடையோருக்கு தேவையான பொருட்கள் மீது எந்தவிதமான வரிகளும் அறவிடப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, செம்மலையில்

# சட்ட விரோத மணல் அகழ்வால் குடிமனைகளுக்குள் கடல் நீர்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, செம்மலையில் குடிமனைகள், விவசாய நிலங்கள் என்பவற்றுக்குள் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதில், கரைதுறைபற்று பிரதேச சபையினரும் கிராம மக்களும் இணைந்து செயற்பட்டு வருவதாக கரைதுறைபற்று பிரதேச சபையின் தவிசாளர் க. விஜிந்தன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: செம்மலை கடலில் இருந்து குடிமனைகள், விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுவதாக நேற்று (08) முற்பகலில் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து, கரைதுறைபற்று பிரதேச சபையின் கனரக வாகனத்தின் உதவியுடன் கிராம மக்களும் இணைந்து, கடல் நீர் பரவுவதை தடுத்தனர்.

கடந்த காலங்களில் இப்பகுதியில் இடம் பெற்ற சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாகவே, குடிமனைகள், விவசாய நிலங்களுக்குள் கடல் நீர் பரவும் நிலை ஏற்பட்டதாக, கிராம மக்களால் தெரிவிக்கப்பட்டது.

14 வயது மாணவி குழந்தை பிரசவம்

# 73 வயது வயோதிபர் கைது

■ எம். றொசாந்த்

மாணவியின் (14 வயது) கர்ப்பத்துக்கு காரணமானவர் எனும் குற்றச்சாட்டில் 73 வயதான வயோதிபர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் திங்கட்கிழமை (05) அனுமதிக்கப்பட்ட 14 வயதான சிறுமி, குழந்தையை பிரசவித்துள்ளார். இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 73 வயதான வயோதிபரை சந்தேகத்தில் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# பாடசாலைத் தோட்டம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, முக்கொம்பன் மகா வித்தியாலய பாடசாலைத் தோட்டம் ஆரம்ப நிகழ்வு பாடசாலை அதிபர் ஜோய். பியசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலைத் தோட்டத்தை அதிபர் அ. பங்கையற்செல்வனும் முக்கொம்பன் கமக்கார அமைப்பு தலைவர் எஸ். ஜெகதீஸ்வரனும் இணைந்து திறந்து வைத்தனர்.



பாடசாலையில் விவசாயப் பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு செயல்முறை ரீதியாக கற்றக் கூடிய வகையில் இப்பாடசாலைத் தோட்டம் அமைய உள்ளது.

# ‘போதைக் கலாசாரம்’ குறித்த கலந்துரையாடல்



■ செந்தூரன் பிரதீபன்

சமூக நெருக்கடியும் போதை கலாசாரமும் எனும் கலந்துரையாடல், கொக்குவில், தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி, போதைப்பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளமை தொடர்பான விடயங்கள் தொடர்பில், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி. யமுனா நந்தா தெளிவுபடுத்தினார்.

போதைப்பொருளுக்கு உட்பட்ட மாணவர்கள், சிறுவர்கள் தொடர்பில் அருட்தந்தை கலாநிதி வின்சன்ற் பற்றிக் அடிகளார் கருத்துகளை முன்வைத்தார். குறித்த கலந்துரையாடலில் மல்லாகம் நீதிமன்றத்தின் உதவி நீதிபதி தேவராஜ், உள்ளிட்ட புத்திஜீவிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கோட்டைக்கட்டியகுளம் பாடசாலையில் இருந்து

# பல்கலைக்கழகத்துக்கு மூவர் தெரிவு

■ மு. தமிழ்ச்செல்வன்

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தின் கோட்டைக்கடியகுளம் பாடசாலையிலிருந்து முதல் தடவையாக மூன்று மாணவர்கள் பல்கலைகழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அற்ற, மிகவும் பின்தங்கிய எல்லைப்புற கிராமமாகக் காணப்படுகின்ற இந்தப் பாடசாலையிலிருந்து, முற்றுமுழுதாக பாடசாலை கல்வியை மட்டுமே பெற்ற மூன்று மாணவர்கள், பல்கலைகழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதற்காக பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், குறிப்பாக குறித்த மாணவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் வே. திவாகரன் ஆகியோருக்கு பாடசாலை சமூகம் தங்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டுள்ளது.



கோட்டைகட்டியகுளம் பாடசாலையில் 2016 இல் உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில், கு.சுஜாந் (கிழக்கு பல்கலைக்கழகம் - கலைப்பீடம்), சி. சிறிமேனகன் (கிழக்கு பல்கலைக்கழகம் கலைப்பீடம்), ஜெ. யசிந்தன் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் விளையாட்டு விஞ்ஞான முகாமைத்துவம்) ஆகியவற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், பாடசாலை தேசியமட்ட எறிபந்தாட்ட சிறப்பு வீரர்களாகவும் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருள் பாவனையும் அதன் பல்வகைக் கண்ணோட்டமும்

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கருத்தரங்கு

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் நன்னடத்தை மற்றும் நல்வாழ்வு மையமும், தனிநபர் தொழில்முறை விருத்திக்கான துறையும் இணைந்து நடத்தும் ‘போதைப்பொருள் பாவனை அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்புகளும்’ என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று (09) பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நடைபெறவுள்ளது.

**“ ‘போதைப்பொருள் பாவனை அதன் பல்வகைக் கண்ணோட்டமும் பிரதிபலிப்புகளும்’ என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று (09) பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நடைபெறவுள்ளது**

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி . ஸ்ரீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், ‘தற்காலத்தில் போதை பொருள் பற்றிய நிலைவரமும் அது தொடர்பான எமது நடவடிகைகளும்’ பற்றி வைத்தியர் க. குமரனும் ‘மனித உரிமைகளும் போதைப்பொருளுக்கு அடிமையாதலும்’ பற்றி முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளரும், சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதனும், ‘போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பான சட்டம் சார்ந்த ஓர் அறிமுகம்’ பற்றி குற்றவியல் நீதிமன்ற நீதவான் அ .அ ஆனந்தராஜாவும் ‘போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் உளவியல் அம்சங்கள்’ பற்றி யாழ். போதனா வைத்தியசாலை மனநல வைத்திய நிபுணர் டி. உமாகரனும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

# சீரற்ற வானிலையால் கிழக்கின் இயல்புநிலை பாதிப்பு

**அம்பாறையில் கடும்காற்றால் 126 வீடுகள் சேதம்**

**திருகோணமலையில் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை**

■ அ. அச்சுதன், எம்.எஸ்.எம் ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் வியாழக்கிழமை (08) வீசிய கடும் காற்று மற்றும் மழையால் 08 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 126 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு 127 குடும்பங்களைச் சேர்ந்த 454 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

உகன பிரதேச செயலாளர் பிரிவில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 286 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 83 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் நாவிதன்வெளி பிரிவில் 07 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 07 வீடு சேதமடைந்துள்ளதாகவும் அம்பாறை பிரிவில் 21 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 20 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தமன பிரிவில் 05 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 05 வீடு சேதமடைந்துள்ளதாகவும் பதியத்தலாவ பிரிவில் 01 குடும்பம் பாதிக்கப்பட்டு 01 வீடு சேதமடைந்துள்ளதாகவும் திருக்கோவில் பிரிவில் 01 குடும்பம் பாதிக்கப்பட்டு 01 வீடு சேதமடைந்துள்ளதாகவும் சம்மாந்துறை பிரிவில் 06 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 06 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் காரைதீவு பிரிவில் 03 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 03 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.



### திருகோணமலையில்...

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக திருகோணமலையில் மழை, கடும் குளிர், காற்றின் வேகம் என்பன அதிகரித்துள்ளன. இதனால் திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்கு செல்லவில்லை. கடந்த இரண்டு நாள்களாக இந்தநிலை நீடிப்பதால் மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் கடலுக்குச் செல்லாது வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர்.











பாதுகாப்பு தேவை கருதிய

# சிறுவரின் திறன்களுக்கு பாராட்டு

■ அபு அலா

திருகோணமலை பாதுகாப்பு தொழில் பயிற்சி நிலையத்தில், பாதுகாப்புத் தேவை கருதி பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்களுக்கு நான்கு மாதகால தையல், கைவேலை போன்ற பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த சிறுவர்களை பாராட்டி, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (06) குறித்த நிலையத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வானி றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சமூக நலன்புரி சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி என்.எஸ் திரவியநாதன், நிலைய பொறுப்பதிகாரி திருமதி ஏ. சுதர்ஷனி, தையல் பயிற்சி ஆசிரியர் திருமதி துஷ்யந் சஞ்ஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை வைத்தியசாலைக்கு 500 கண் வில்லைகள்

■ வி.ரி சகாதேவராஜா

அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (IMHO- USA) கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 500 கண்வில்லைகளை வழங்கியுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா முரளீஸ்வரன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, இந்தக் கண் வில்லைகள் வழங்கிவைக்கப்பட்டன.

சர்வதேச சுகாதார வைத்திய நிறுவனத்தின் பொருளாளர் முரளி ராமலிங்கம் (கணக்காளர்) நேற்று முன்தினம் (07) நேரடியாகவே வைத்தியசாலைக்கு விஜயம் செய்து இந்தக் கண்வில்லைகளை வழங்கினார். இந்நிகழ்வில், ஆதார வைத்தியசாலையின் பிரதி வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஜெ. மதன், நிறுவனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் எந்திரி ஹென்றி அமல்ராஜ், வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் தேவ அருள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# மாற்று நடவடிக்கை அவசியம்

பசறை, லுணுகலை பகுதிகளில் பலத்த காற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி மாற்று நடவடிக்கைகள் குறித்து செந்தில் தொண்டமான் மாவட்ட அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பசறை, லுணுகலை உட்பட்ட தோட்டப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் (07) இரவுமுதல் திடீரென வீசிவரும் பலத்த காற்று காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்குமாறு மாவட்ட அதிபருக்கு இ.தொ.கா



தலைவர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களை மாற்று இடங்களில் தங்கவைப்பதுடன் அவர்களுக்கான உலருணவுகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, சேதமடைந்த வீடுகளை சீர்திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் செந்தில் தொண்டமான் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன் இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, பாடசாலையை சீர்திருத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஊவா மாகாண செயலாளருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

# உடனடியாக கவனம் செலுத்தப்படும்

சீரற்ற வானிலையின் விளைவாக பதுளையில் பல பகுதிகளில் வீசிவரும் பலத்த காற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பு மற்றும் நிவாரணம் தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், சீரற்ற வானிலையின் விளைவாக பெருந்தோட்டத்தில் பல



பகுதிகளில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

காற்றின் காரணமாக ஆங்காங்கே சரிந்து வீதிகளில் விழுந்துள்ள மரங்களால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் பெருந்தோட்ட பகுதிகளில் மக்களின் வீடுகளும் சேதமடைந்துள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களை மாற்று இடங்களில் தங்க வைப்பதற்கும் அவர்களுக்குரிய நிவாரண உதவிகளை வழங்கவும் அவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துரைக்கும் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## மாணிக்கக்கல் அகழ்ந்த ஏழுபேர் கைது



**ரஞ்சித் ராஜபக்ஷ**

பொகவந்தலாவை- மஹாஎலிய வனப்பகுதியில் பாரிய சுற்றாடல் அழிவை ஏற்படுத்தி, சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 7 பேர் பொகவந்தலாவை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நேற்று (8) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஏழு பேரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







## கௌரவிப்பு

அக்கரப்பத்தனை, ஹோல்புறூக் ரீப்பப்ளிகன் சர்வதேச பாடசாலையில் 2021 ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் நூறு சதவீதம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, பாடசாலைக்கும் சமூகத்துக்கும் பெருமை சேர்த்த மாணவர்களுக்கான பாராட்டு விழா, பாடசாலை முதல்வர் திருமதி ஜெயசத்தியவாணி தலைமையில் லக்சுமிமஹால் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

துவாரகஷான்


## ஓட்டோ மீது மரம் சாய்ந்ததில் ஒருவர் பலி

**ஆ.ரமேஸ்**

இராகலை, புரூக்சைட் பகுதியில் நேற்று (08) காலை வீதியில் பயணித்து கொண்டிருந்த ஓட்டோ மீது மரம் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹய்பொரஸ்ட் பகுதியிலிருந்து இருந்து இராகலையை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ மீதே பாரிய மரம் வீழ்ந்துள்ளது.

இதன்போது ஓட்டோ சாரதி உள்ளிட்ட நால்வர் பயணித்துள்ளடன், 61 வயதான பி.எஸ்.மயில்வாகனம் உயிரிழந்துள்ளார். ஏனைய மூவரும் காயங்களுடன், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





## மலையகத்துக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின

**எஸ்.கணேசன், ரஞ்சித் ராஜபக்ஷ**

தடைப்பட்டிருந்த மலையக ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாக நானுஓயா ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளையிலிருந்து கொழும்பு ரயில் நிலையத்தை நோக்கி சென்ற தபால் ரயில் நேற்று முன்தினம் (07) இரவு நானுஓயா மற்றும் கிரேட்வெஸ்டன் ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் 124 ஆவது மைல் கல் இடத்தில் வைத்து தடம்புரண்டுள்ளமையால் மலையகத்திற்கான ரயில் சேவை பாதிப்படைந்தது.

குறித்த ரயலின் பெட்டி ஒன்று தடம்புரண்டதன் காரணமாகவே மலையகத்திற்கான ரயில்சேவை பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்று (08) காலை 8 மணியளவில் ரயில் பாதை சீரமைக்கப்பட்டுள்ளதுடன், ரயில்கள் வழமைப் போன்று சேவையில் ஈடுபடுவதாகவும் நானுஓயா ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டது.

## கொட்டகலை மாவட்ட வைத்தியசாலைக்கு முதலிடம்

**பி.கேதீஸ்**

2022ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தலில் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலை முதலாம் இடத்தை பெற்றுள்ளது.

கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் காயத்திரி ரவிவர்மாவின் தலைமைத்துவ, வழிகாட்டலின் ஊடாகவும் இந்த வெற்றி பெறப்பட்டுள்ளது.

நோயாளர்களை சிறப்பாக பாராமரித்தமை, நோயாளர்களுக்கு பரிசோதனைகளை முறையாக மேற்கொண்டமை, அன்புலன்ஸ் சேவையை சிறப்பாக முன்னெடுத்தமை, சுற்றாடலையும் வைத்தியசாலையும் சுத்தமாக பேணியமை, ஒற்றுமையுடனும் குழுவாகவும் செயற்பட்டமை போன்ற இன்னும் பல சிறப்பு அம்சங்களை பின்பற்றியமையால் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலை மாவட்டத்தில் முதல் இடத்தை பெற்றுள்ளது.

இதற்கமைய, கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் இவ்வெற்றிக்கு காரணமான வைத்தியர்கள், தாதியர்கள் அதன் உத்தியோகத்தர்கள் சான்றிதழ்கள் வழங்கியும் விருதுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.



## இந்தியாவிடம் உதவி கோருவேன்

### இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்

**எஸ்.கணேசன்**

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரை இன்று (9) வெள்ளிக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் இதன்போது மலையகத்தில் உள்ள பாடசாலைக்கான உதவித் திட்டங்கள் தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், புஸ்ஸல்லாவை சரஸ்வதி தேசிய பாடசாலைக்கு நேற்று (08) விஜயம் மேற்கொண்டிருந்த போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் சமூகத்தை சந்தித்தேன்; குறைப்பாடுகளை கேட்டறிந்தேன். இப்பகுதியில் சரஸ்வதி மத்திய கல்லூரி முதன்மை பாடசாலையாக விளங்குகின்றது. தோட்டப்பகுதிகளை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள பழைமையானதும் பாரம்பரியம்மிக்கதுமான இப்பாடசாலைக்கு உதவிகளை வழங்க வேண்டியது எனது பொறுப்பாகும்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரை சந்திக்கும் போது, இப்பாடசாலை பற்றியும் எடுத்துரைப்பேன். அதுமாத்திரமின்றி, மலையகத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளின் பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளேன் என்றார்.





## கண்காட்சி

யட்டியாந்தோட்டை, கே/தெஹி நாகஸ்தன்ன பாடசாலையின் ‘சுகாதாரமும் உடற்கல்வியும்’ தொடர்பான பாடத்தை விளக்கமளிக்கும் முகமாக கண்காட்சியொன்று அண்மையில் நடத்தப்பட்டது. தரம் 10, 11 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கண்காட்சியை சிறப்பான முறையில் நடத்த மாணவர்களுக்கு பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்புகளை நல்கியிருந்தனர்.







# ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் அபாயகர அறிவிப்பு

நாட்டின் முழு சனத்தொகையில் 62 இலட்சம் மக்கள், உணவு நெருக்கடிக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளன ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், 2023ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்த நிலைமை, இன்னும் மோசமடையுமென எதிர்வு கூறியுள்ளது.

அந்த 62 இலட்சத்தில் 29 இலட்சம் சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் என்பதுதான் கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விடயமாகும். போசாக்கான உணவு இன்மை, வயதுக்கு ஏற்ற வளர்ச்சி, நிறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களை, அதிலிருந்து மீண்டெழச் செய்யவேண்டும். எனினும், ஐ.நா சிறுவர் நிதியத்தின் அறிக்கை, இன்னுமின்னும் அச்சுறுத்துவதாகவே உள்ளது.

அதுமட்டுமன்றி, 11 இலட்சம் சிறுவர்களுக்கு கல்விக்கான உதவி தேவைப்படுகின்றது என்றும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அடங்கலாக 28 இலட்சம் பேருக்கு போசாக்கான உணவு தேவைப்படுவதையும் அறிக்கையின் ஊடாக ஐ.நா சிறுவர் நிதியம் வலியுறுத்தியுள்ளது.

நாளொன்றுக்கான மூவேளை உணவை, இரண்டொரு வேளைகளாக பலரும் குறைத்துக்கொண்டுள்ளனர். ஒரு வேளைக்கான உணவில் கூட, போதியளவான போசாக்கு நிறைந்த உணவுகள் இருக்கின்றன என்பதை அச்சொட்டாக கூறமுடியாது. 'வயிற்றை சும்மா போடக்கூடாது; ஏதாவது சாப்பிட்டுக்கொள்ளவேண்டும்' எனக் கிடைப்பதை வைத்து வயிற்றை நிரப்பிக்கொள்கின்றனர்.

கடந்தவாரத்தில் ஒருசில பொருட்களின் விலை குறைப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டன. இன்னும் சில பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. சேவைகளின் கட்டணங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் போக்குவரத்து கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளமாட்டோமென பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் அறிவித்துவிட்டன.

ஆக, விலையை குறைத்து, சிலவற்றின் விலைகளை அதிகரித்து, அரசாங்கம் சமப்படுத்தியுள்ளது. என்னதான் விலைகள் குறைக்கப்பட்டாலும் கையில் மிஞ்சம் இருக்காது என்பது மட்டுமே உண்மையாகும். வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், ஐ. நா சிறுவர் நிதியத்தின் அறிக்கை பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நமது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறான காரணங்கள் கூறப்பட்டாலும், ரஷ்யா-உக்ரேனுக்கு இடையிலான போர், கடுமையான தாக்கத்தை செலுத்திக்கொண்டுதான் இருக்கின்றது. நம்மைப்போன்ற வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் மீது அந்தப் போரின் தாக்கம் கடினமானதாகும்.

டொலர் நெருக்கடி, உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையேற்றம் இவையெல்லாம் உலகளாவிய விநியோக சங்கிலியில் இடையூறுகளை ஏற்படுத்திவிடும். இது நிலைமையை இன்னும் மோசமடையச் செய்யும் என்பதை கவனத்தில் கொள்ளவே வேண்டும்.

நகர்ப்புறங்களில் சாதாரண குடும்பத்தை கொண்டு நடத்தவேண்டுமாயின் மாதத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் தேவைப்படுகின்றது. மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், சமையல் எரிவாயு உள்ளிட்ட இதர செலவுகளுக்காக இன்னுமின்னும் உழைக்கவேண்டிய நிலைமையே அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நிலைமை இன்னும் மோசமடையுமென்ற ஐ.நா சிறுவர் நிதியத்தின் அபாயகர அறிவிப்பை கவனத்தில் எடுத்து, முன்கூட்டியே வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.




தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மாறும் தன்மையுடையவர்கள் நாங்கள் என்பதைப் புரிந்துகொள்வோம். மனிதன் முழுமையானவன் அல்லன். தனக்குள் இருக்கும் பலவீனங்களை உணர்ந்துகொண்டால், தன்னைத்தான் சிறிதுசிறிதாக மாற்றிவிட முயன்று வென்றுவிடலாம்.

எதிலும் திருப்தி இல்லாத காரணங்களால், எங்களை நாங்கள் இழந்துவிடுகின்றோம். ஆசைகள் ஆபத்தானவை; அதைக் கண்டபடி அலையவிடுபவனே பெரும் அவஸ்தைப்படுகின்றான்.

கிடைத்ததே போதும் என எவர்தான் நினைக்கிறார்கள்? ஆனாலும், சாதாரண வாழ்வு சிறந்தது என நினைக்கும் எளிய வாழ்வு வாழ்பவர்கள், எளிமையானவற்றுக்கு மாறானவற்றை ஏற்றுக்கொள்வதில்லை.

சாந்தமாக வாழ்பவரை அநேகர் சீண்டிவிடுகின்றார்கள். வேண்டாத ஆசைகளை நெஞ்சில் விதைத்துவிடுவதும் உண்டு. இதை நம்பி, தெரியாத கருமங்களைச் செய்து, கைப்பொருளையும் இழந்துவிடுகின்றார்கள்.

படிப்படியாக தங்களை வளர்ப்பதே, புத்திசாதுரியம். யாவருக்கும் அறிவுண்டு. அதில் தெளிவுபடவும் முடியும். காலஅவகாசம் கொடுக்காமல் முடிவுசெய்க! காலத்துக்கு இசைந்து வாழ்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 05:

# ஜேர்மனியை அதிரவைத்துள்ள அதிவலதின் சதி



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஜேர்மனியர்களுக்கு நேற்று முன்தினம், ஓர் அதிர்ச்சிகரமான செய்தியோடுதான் விடிந்தது. அச்செய்தி இதுதான்: 3,000க்கும் மேற்பட்ட பாதுகாப்பு அலுவலர்கள் நாடெங்கும் தேடுதல் வேட்டையில் இறங்கி, 25 பேரைக் கைது செய்துள்ளனர். இதன்மூலம் அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்கான அதிவலதுசாரிக் குழுக்களின் திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது. இச்செய்தி, சராசரி ஜேர்மனியனை மிகுந்த அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கியுள்ளது.

இன்று ஜேர்மனியில் மட்டுமன்றி ஐரோப்பா எங்கும் இதுவொரு முக்கிய பேசுபொருளாய் உள்ளது. பொருளாதார நெருக்கடியின் தீவிரம் எதையெல்லாம் நோக்கி நகர்த்தும் என்பது ஒருபுறமும், அதிவலதுசாரி செயற்பாடுகளை அரசுகள் மறைமுகமாக ஆதரித்ததன் விளைவு என்றும் மறுபுறமாக விவாதங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

ஆனால், உலகளாவிய ரீதியில் அதிவலதுசாரிப் போக்கை அவதானிப்பவர்களுக்கும் குறிப்பாக, கடந்த பத்தாண்டுகளில் ஐரோப்பாவில் அதன் செயற்பாடுகளை நோக்குவோருக்கும் இவை ஆச்சரியத்தைத் தரமாட்டா!

வன்முறையான சதிப்புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கவிழ்த்து, இளவரசர் ஒருவரை மன்னராக்கும் முயற்சியில் ஈடுபட்டதற்காக ஓர் இளவரசர், இராணுவ வீரர்கள், நீதிபதி, அதிவலதுசாரிக் கட்சியான 'ஜேர்மனிக்கு மாற்று' (AfD) கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட தீவிர அதிவலதுசாரி செயற்பாட்டாளர்கள் என 25 பேரை ஜேர்மன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் பலர் ரீச்சின் குடிமக்கள் (Reichsbuerger) அமைப்பின் உறுப்பினர்கள். இவர்கள், நவீன கால ஜெர்மனியை ஒரு சட்டபூர்வமான நாடாக அங்கிகரிக்கவில்லை. இவர்களில் சிலர், முடியாட்சியின் கீழ் ஜேர்மன் சாம்ராஜ்யத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும், சிலர் நாஜி கருத்துகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

மற்றவர்கள், ஜெர்மனி இன்னமும் ஓர் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருப்பதாக நம்புகிறார்கள். இவர்களின் இந்த எடுகோள்கள் அனைத்தும், உலகளாவிய அதிவலதுசாரி அமைப்புகளுக்கு உரிய சதிக்கோட்பாடுகளின் வழிப்பட்டு, ஆழமான இன்னோரரசு (Deep State) என்ற கோட்பாட்டை முழுமையாக நம்புவர்களால் முன்வைக்கப்படுபவையாகும்.

இதற்கான மிகச் சிறந்த உதாரணம், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அதிவலதுசாரி ஆதரவாளர்கள், அமெரிக்கத் தலைமைக் கட்டடத்தை முற்றுகையிட்ட நிகழ்வாகும். இந்நிகழ்வும்கூட, இவ்வாறான சதிக்கோட்பாடுகளால் உந்தித் தள்ளப்பட்டதாகும்.

கைதானோரில் முன்னாள் ஜேர்மன் அரசகுடும்பத்தின் உறுப்பினர் ஒருவருக்கு முக்கிய வகிபாகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்குழு ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொண்டு, ஒரு பட்டத்து இளவரசை ஆட்சியில் அமர்த்தி, ஜேர்மனியை வழிநடத்துவது என்று திட்டமிட்டது என்று ஜேர்மன் அரசாங்கம் தெரிவிக்கிறது.

இந்தக் குழு, அரசாங்கத்தின் கட்டமைப்பைப் பின்பற்றி, 2021 நவம்பர் மாதம் முதல், ஒரு 'நிர்வாக சபை'யை உருவாக்கி, அயலுறவுத்துறை, சுகாதாரத்துறை போன்ற பல்வேறு துறைகளுடன் ஆட்சியைப் பிடிக்கக் காத்திருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதான இராணுவ வீரர்களில் ஜேர்மனியின் அதிசிறப்புக் கொமாண்டோப் படையணியைச் (KSKElite Forces) சேர்ந்த ஒருவரும் அடங்குகிறார். இக்குழுவில் உள்ள இராணுவத்தினர் ஆயுதங்களையும் உபகரணங்களையும் தொடர்ச்சியாக வாங்கிச் சேகரித்துள்ளனர். புதிய உறுப்பினர்களை சேர்க்க முயன்றுள்ளதோடு இணைக்கப்பட்ட புதியவர்களுக்கு பயிற்சிகளையும் வழங்கியுள்ளனர். இவர்களின் ஆட்சேர்ப்பு முயற்சிகளின் கவனம் முதன்மையாக இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் மீதானதாக இருந்துள்ளது.

ஜேர்மனியின் அதிசிறப்புக் கொமோண்டோப் படையணிக்கும், அதிவலதுசாரி சித்தாந்தத்துக்கும் இடையிலான உறவு மிக நீண்டது. இப்படையணி, 1996 இல் நிறுவப்பட்டது; 2003 ஆம் ஆண்டில் அதன் அப்போதைய தளபதி தீவிர வலதுசாரி தீவிரவாதிகளுடன் நெருக்கமாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு, முன்கூட்டியே ஓய்வு பெற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்.

2021இல் இப்படையணிச் சிப்பாயின் வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார், ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றினர். அச்சிப்பாய் அதிவலதுசாரி குழுக்களுடன் இயங்கியமை தெரியவந்ததைத் தொடர்ந்து, இப்படையணியின் ஒரு சிறுபிரிவு முற்றாகக் கலைக்கப்பட்டது.

இவ்வாண்டு தொடக்கத்தில், இப்படையணியின் வீரர் ஒருவர் நீதிமன்ற விசாரணைக்கு உள்ளானார். புலம்பெயர்ந்தோருக்கு எதிரான கோபத்தைத் தூண்டுவதற்காக, சிரிய புகலிடக் கோரிக்கையாளர் போல் காட்டிக்கொண்டு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல்வாதிகளைத் தாக்க அவர் திட்டமிட்டதாக குற்றம் சாட்டப்பட்டார்.

சமீபத்திய ஆண்டுகளில் பல தீவிர வலதுசாரி சம்பவங்களால், ஜேர்மன் இராணுவம் கலக்கமடைந்துள்ளது. பலர் இந்தச் சிறப்புப் படையணியை முற்றாகக் கலைக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையிலேயே இச்சம்பவம் அரங்கேறியுள்ளது. முந்தைய தேடுதல் நடவடிக்கையில் இப்படையணியின் அரண்கள், பொலிஸாரால் முழுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் Reichsbuerger அமைப்பின் வளர்ச்சியும் அதிகரிக்கும் செல்வாக்கும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. ஆனால், 2016ஆம் ஆண்டு, இவ்வமைப்பின் உறுப்பினர் ஒருவர், பொலிஸ் அதிகாரியை சுட்டுக் கொன்றதில் இருந்து, இவ்வமைப்பின் மீது கவனம் குவியத் தொடங்கியது.

ஜேர்மன் புலனாய்வுத் தகவல்களின் படி, கொரோனா தொற்றுக்கு முன்வரை கிட்டத்தட்ட 21,000 பேர் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதில் பெரும்பான்மையானோர் வன்முறையைப் பயன்படுத்தத் தயங்காதோர் ஆவார்.

இவ்வமைப்பு, மிகச் சிறிய குழுக்கள் மற்றும் மெய்நிகர் ஊடாக இயங்குகிறது. ஆனால், எந்தவொரு கட்டமைப்புகளுடனும் இணைக்கப்படாத தனிநபர்களையும் உள்ளடக்கியது. சமீப காலமாக, கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகரித்து வரும் எதிர்ப்பாளர்களால், உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் பல உறுப்பினர்கள், ஜெர்மன் கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளதாகவும் அவை, ஜேர்மனியர்களைத் தடைசெய்யும் நிர்வாகச் செயல்கள் என்று நிராகரிக்கிறார்கள், இதனால், இவர்கள் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக மோதுகிறார்கள். கடந்தாண்டு தனது வீட்டைச் சோதனை செய்யவிருந்த பொலிஸ் அதிகாரி மீது, இவ்வமைப்பின் உறுப்பினர் ஒருவர் அம்பெய்து தாக்கினார்.

சில உறுப்பினர்கள், 1918 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போரின் விளைவாக, பதவி விலக வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளான பேரரசர் இரண்டாம் வில்ஹெல்மின் கொள்ளுப் பேரன், புதிய ஜெர்மன் பேரரசராக பதவியேற்க வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்கள் ஜேர்மன் பேரரசு முறையாகக் கலைக்கப்படவில்லை எனவும், அது உலகப் போர்களில் வென்ற நாடுகளின் இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பதாகவும் வாதிடுகின்றனர்.

அதிவலதுசாரிக்கான ஆதரவு, இராணுவத்தில் மட்டுமன்றிச் பல நிர்வாக துறைகளிலும் உண்டு. கடந்தாண்டு, ஜேர்மனியின் உயர்மட்ட நிர்வாக நீதிமன்றம் Reichsbuerger இயக்கத்தின் ஒரு பகுதியாக இருந்ததற்காக, ஓர் அரச ஊழியரை பதவியில் இருந்து நீக்கியது. அந்த நபர் தனது பிறந்த மாநிலத்தை 'பவேரியா இராச்சியம்' என்று பெயரிட்டு, 1913ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தைக் குறிப்பிட்டு, கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்தார்; இவ்வாறு பல நிகழ்வுகள் நடந்துள்ளன.

அண்மையில், ஜேர்மன் சாம்ராஜ்யத்திற்கு முந்தைய பாடசாலை புத்தகங்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன், பாடசாலைகளில் கொரோனா வைரஸ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், மாற்றுப் பாடைசாலை பாடங்களை ஒழுங்கமைக்க இவ்வமைப்பு உறுப்பினர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜேர்மனியின் வரலாற்றில், வலதுசாரி தீவிரவாதிகளுக்கு எதிராக மிகப்பெரிய புலனாய்வு விசாரணையாக இது அமைந்தது. பொலிஸாரின் குற்றவியல் பிரிவினர், இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் முதல் 52 சந்தேக நபர்களை குறியீட்டு பெயரில் கண்காணிக்கத் தொடங்கினர்.

'நிழல்கள்' என்ற இரகசியப் பெயரால் அழைக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது தொலைபேசிகளைக் கண்காணித்தல், அரட்டைக் குழுக்கள், வங்கிக் கணக்குகளைச் சரிபார்த்தல் உட்பட பணிகளை மேற்கொண்ட வண்ணமிருந்தது. பெர்லினில் உள்ள ஒருவரிடமிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

Reichsbuerger மற்றும் கொரோனா வைரஸ் மறுப்பு இயக்கத்தின் (Querdenker) உறுப்பினர்கள் மற்றும் QAnon சதி கோட்பாட்டின் ஆதரவாளர்களை உள்ளடக்கிய உறுப்பினர்களுக்கு இடையே வலுவான கருத்தியல் தொடர்புகளை விரைவாக புலனாய்வாளர்கள் நிறுவியுள்ளர்.

இக்குழுவானது முன்னாள் இராணுவத் தளபதியின் தலைமையின் கீழ், 'Day X' என்று அழைக்கப்படுவதற்குத் தயாராகி வந்தது, அதில் சுமார் முப்பது பேர் ஜேர்மன் பாராளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட இருந்தனர்.

2021 ஆம் ஆண்டு அமெரிக்க பாராளுமன்றம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை உதாரணமாகக் கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களை கைவிலங்கிட்டு கைது செய்வது திட்டத்தின் பகுதியாகும். பாராளுமன்றத்தைக் கையகப்படுத்திய பிறகு, இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய குழு திட்டமிட்டது.

இந்தச் சதிமுயற்சி தோல்வியில் முடிந்தாலும், ஜேர்மனியிலும் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள அரசியல் வட்டாரங்களில் இது ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் பல வினாக்களை எழுப்பியுள்ளன.

## கடிதங்கள்

கந்தளாய் பிரதேச சபை:

### கவனிப்பாரற்ற நிலையில் சிறுவர் பூங்கா



கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பேராறு சிறுவர் பூங்கா, ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, தற்போது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது. இவ்வாறு பராமரிப்பின்றிக் காணப்படும் பேராறு சிறுவர் பூங்காவிலுள்ள பெறுமதியான அமரும் கதிரைகள், கொங்கிரீட் தூண்கள் என்பன உடைக்கப்பட்டுள்ளதோடு, அங்கு நாட்டப்பட்ட மரங்களும் பிளாஸ்ட்டிக் ஊஞ்சல்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

மின் இணைப்பு இல்லாத காரணத்தால், அங்குள்ள பாதுகாப்பு வேலிகளை வெட்டி எடுத்துள்ளதோடு, 'எல்இடி' மின்விளக்குகள் 13 எண்ணிக்கையிலானவை திருடப்பட்டுள்ளன.

ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவு செய்து நிர்மாணித்த பிரதேச சபைக்கு, ஒரு பாதுகாவலரை நியமிக்க முடியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மக்கள் பயன்படுத்த முடியாதவாறு சீரழிந்து போயிருக்கும் பேராறு சிறுவர் பூங்காவை, பிரதேச சபை நிர்வாகம் கவனம் செலுத்தி, புனர்நிர்மாணம் செய்து, சிறுவர்கள் முறையாகப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்

வடக்கு, கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு

# ஜப்பான் ஆதரவு



இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பணிகளுக்காக 648,148 அமெரிக்க டொலர் (232 மில்லியன் ரூபாய்) தொகையை வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன்வந்துள்ளது. Mines Advisory Group (MAG) அமைப்புக்கு இந்தத் தொகை வழங்கப்படும். இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றதுடன், இதில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் MAG இன் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்டி மெக்லென்னன் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

ஜப்பானிய உதவியினூடாக, MAG இனால் முன்னெடுக்கப்படும் 14 ஆவது கண்ணி வெடி அகற்றும் திட்டமாக இது அமைந்துள்ளது. முன்னைய 13 திட்டங்களினூடாக 2,965,949 சதுர மீற்றர்களுக்கு அதிகமான பகுதி விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 15,831 க்கு அதிகமான கண்ணி வெடிகள் மற்றும் இதர வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் 259,464 சதுர மீற்றர் காணி விடுவிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. இதனூடாக கண்ணி வெடி பாதிப்புள்ள பகுதிகளை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மீளக்குடியேறி வாழக்கூடிய பகுதியாக மாற்றியமைக்கவுள்ளது. இதனூடாக 7,424 பேரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பு வழங்கப்படும்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஆரம்பித்து, இந்த ஆண்டில் MAG தனது 20 வருட பூர்த்தியை கொண்டாடியிருந்தது. 2002 ஆம் ஆண்டில் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதலில், ஜப்பானால் இந்தப் பணிகளுக்காக பாரியளவில் பங்களிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. மொத்தமாக 43.3 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான தொகை Grant Assistance for Grassroots Human Security Project (GGP) திட்டத்தினூடாக வழங்கப்பட்டிருந்தன. கண்ணிவெடி இல்லாத இலங்கையை எய்தும் திட்டத்துக்கு ஆதரவளிக்க ஜப்பான் தொடர்ந்தும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த மானிய ஒதுக்கீடு தொடர்பில் கிறிஸ்டி மெக்லென்னன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

“இலங்கையிலும், சர்வதேச நாடுகளிலும் கண்ணிவெடி அகற்றும் செயற்றிட்டங்களுக்கு மனிதநேய அடிப்படையில் நன்கொடை உதவிகளை வழங்கி வரும், ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து இந்த மானியத் தொகையை பெற்றுக் கொள்வதையிட்டு MAG பெருமை கொள்கின்றது. கடந்த எட்டு வருடங்களில் மாத்திரம், MAG ஸ்ரீ லங்கா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்துக்கிடையிலான பங்காண்மை என்பதனூடாக, 16,000 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டும், செயலிழக்கச் செய்யப்பட்டும் உள்ளன.

இதனூடாக, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பலருக்கு தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியேறி வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு முடிந்துள்ளது.

ஜப்பானிய நாட்டு மக்களிடமிருந்தான நிதியளிப்பினூடாக, உயிர்களைப் பாதுகாப்பதற்கு மாத்திரம் பங்களிப்பு வழங்கப்படாமல், நாட்டில் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பு வழங்கப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக ஜப்பானிய ஆதரவினூடாக, இலங்கையில் இறுதிக் கட்டத்திலுள்ள கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க MAG எதிர்பார்ப்பதுடன், கண்ணிவெடி இல்லாத இலங்கையைக் கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு ஆதரவளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது” என்றார்.

விருந்தோம்பல் துறை மீட்சிக்கு

# SLT-MOBITEL ஆதரவு

ஹோட்டல் துறையால், சுற்றுலாப் பயணிகளுக்கு வெகுமதியுடனான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் தேவைகளை புரிந்து கொண்டு, SLT-MOBITEL Enterprise இனால் பரிபூரண தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் சிறந்த பக்கேஜ்கள் போன்றவற்றை விருந்தோம்பல் துறைக்கு வழங்கி, அதனூடாக தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது.

துறைசார்ந்த நிறுவனங்களை தமது ஹோட்டல்களுக்கும் சொத்துகளுக்கும் சிறந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்கி, சுற்றுலா வருகைகளை அதிகரிக்கச் செய்வதற்கு வலுவூட்டவும், cloud அடிப்படையிலான Check-In தீர்வை வழங்கி, நிறுவனங்களை தொலைவிலிருந்தும் கட்டுப்பாட்டில் பேணுவதற்கு உதவவும் முன்வந்துள்ளது.

Check-In வியாபார தீர்வில், ஒன்லைன் பிரயாண முகவர்கள் மற்றும் கொடுப்பனவு கேட்வே உடனான Booking Engine ஐ கொண்டுள்ளதுடன், மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய நாட்காட்டியுடனான நாட்காட்டி முகாமைத்துவம் மற்றும் உடனுக்குடனான மெருகேற்றங்கள், கொடுப்பனவுகள் மற்றும் கட்டணப் பட்டியல் மாதிரிகள், செயற்பாடுகளை சுயமாக்கக் கூடிய Housekeeping மாதிரி, வாடிக்கையாளர் தகவல்கள் மற்றும் தேவைகளை பின்தொடரக்கூடிய CRM செயற்பாடுகள் மற்றும் பெருவாரியான அறிக்கைகளை தயாரிக்கக்கூடிய வசதி போன்றன அடங்கியுள்ளன.

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், SLT-MOBITEL Enterprise இனால் அடுத்த தலைமுறை குரல், வலையமைப்பு, டேட்டா ஹோஸ்டிங், நிர்வகிப்பு சேவைகள் போன்றன one-stop-shop ஆக வழங்கப்படுவதுடன், விருந்தோம்பல் துறைக்கு மதிநுட்பமான தொழில்நுட்ப வசதி வழங்கப்பட்டு, வேகமாக வளர்ச்சியடைய பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

SLT-MOBITEL Enterprise இனால் குரல் சேவை வழங்கப்பட்டு, ஹோட்டல்களுக்கு தமது தொடர்பாடல் கட்டமைப்பை, பிரத்தியேகமான தொடர்பாடல் வட்டமாக மாற்றியமைத்துக் கொள்ளும் வசதி வழங்கப்படுகின்றது. பரந்தளவு நிலையான மற்றும் மொபைல் இணைப்புத் தீர்வினூடாக, சொத்துகளுக்கு தமது உள்ளக தொடர்பாடல்களை சௌகரியமாக எவ்விதமான தடங்கல்களுமின்றி முன்னெடுக்க உதவியாக அமைந்துள்ளது.

சகல தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு Unlimited Internet வசதியும் வழங்கப்படுகின்றது. விருந்தினர்களுக்கு ஒப்பற்ற இணைய சேவையை அணுகுவதற்கு Enterprise Wi-Fi வசதி வழங்கப்பட்டுள்ளதுடன், ஹோட்டல்களுக்கு டேட்டாவை டோக்கன் முறையில் வழங்கி நிர்வகிக்கும் வசதியையும் வழங்குகின்றது. மேலும்




மேலதிக GB பக்கேஜ் ஊடாக, ஹோட்டல்களுக்கு தமது டிஜிட்டல் பிரசன்னத்தை மேம்படுத்த அல்லது தினசரி செயற்பாடுகளை முன்னெடுக்க ஆதரவளிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த களிப்பூட்டும் தெரிவுகளை வழங்கும் வகையில், PEO TV இனால் 15 இணைப்புகள் வரை ஒரே ஃபைபர் இணைப்பினூடாக வழங்கப்படுகின்றது. ஹோட்டல் PCகள் மற்றும் லப்டொப்களை அநாவசியமான சைபர் இடர்களிலிருந்து பாதுகாத்திடும் வகையில், SLT-MOBITEL Enterprise இனால் Kaspersky IP End point வழங்கப்படுகின்றது. பரந்தளவு பாதுகாப்பு தேவைகளுக்கு பொருத்தமான வகையில் Surveillance தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஹோட்டல் ஊழியர்களுக்கு வாடிக்கையாளர் கோரிக்கைகளுக்கு 24 x 7 நேரமும் பதிலளிக்க உதவும் வகையில் விசேடமான chatbot சேவையான Bizchat காணப்படுகின்றது. இதனூடாக, விருந்தினர்களுக்கு நாடு மற்றும் கவர்ச்சியம்சங்கள் பற்றிய உடனடி தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு உதவிகள் வழங்கப்படுவதுடன், தொழில்நுட்ப அடிப்படையிலமைந்த தீர்வான TeDi Alexa Smart Hub என்பதும் காணப்படுகின்றது.

# ஒன்லைனில் பாலியல் மோசடி: 14,000 பேர் மீட்பு



ஒன்லைன் மூலம் பாலியல் மோசடியில் ஈடுபட்ட 18 பேரை சைபராபாத் பொலிஸார் கைதுசெய்துள்ளதோடு அவர்களால் பாதிக்கப்பட்ட 14,000 பேரையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 18 பேரும் ஆள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் கடந்த 3 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 14,000 பேரை விபச்சாரம் உள்ளிட்ட பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட நபர்கள் பெரும்பாலும் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, புதுடெல்லி, மும்பை, அசாம் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து, உஸ்பெகிஸ்தான், ரஷ்யாவைச் சேர்ந்தவர்களும் இக்குற்றங்களில் ஈடுபட வற்புறுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சைபராபாத் பொலிஸ் ஆணையாளர் ஸ்டீபன் ரவீந்திரா கூறியதாவது: “பெண்களுக்கு ஆடம்பரமான வாழ்க்கையை அமைத்துத் தருவதாகக் கூறி, இந்த வலைக்குள் இழுக்கின்றனர். சில நேரங்களில் MDMA மருந்துகள் கொடுத்து குற்றவாளிகளாக இணங்க செய்கின்றனர்.

பெரும்பாலும் மோசமான பொருளாதார சூழலில் இருக்கும் பெண்கள், சிறுமிகளையே இவர்கள் குறிவைக்கின்றனர். வாடிக்கையாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இடைத் தரகர்களாக குற்றவாளிகள் செயற்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் ஆடம்பரமான, மகிழ்ச்சியான வாழ்க்கை முறை கிடைக்கும் என நம்பியே இவ் வலைக்குள் சிக்குகின்றனர்” எனத் தெரிவித்துள்ளார்.



## 5 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர் சிக்கினார்

கொலை முயற்சி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, தலைமறைவாக இருந்த நபர் 5 ஆண்டுகளின் பின்னர் பொலிஸாரிடம் சிக்கிய சம்பவம் பெங்களூரில் இடம்பெற்றுள்ளது.

பெங்களூரில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களைப் பிடிக்க ‘செல்போன் செயலி’ திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம், சந்தேகப்படும் படியாகச் சுற்றி திரியும் நபர்களின் கைரேகைகள் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் ஏதேனும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களா? எனக் கண்காணிக்கப்பட்டு வருவதோடு, அவ்வாறு அவர்கள் குற்றம் புரிந்திருப்பின் அவர்களைப் பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

இதன் மூலம் குற்றம் புரிந்து விட்டு நீண்டகாலமாகத் தலைமறைவாக இருக்கும் பலரை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

அந்தவகையில் பெங்களூர் பொலிஸார் அண்மையில் இச் செயலியைப் பயன்படுத்தி 2017ஆம் ஆண்டு நடந்த கொலை முயற்சி வழக்கில் தலைமறைவாக இருந்த ஓட்டோ சாரதியொருவரைக் கைது செய்துள்ளனர்.

**பெங்களூரில் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் ‘செல்போன் செயலி’ திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இதனால், குற்றம் புரிந்து விட்டு தலைமறைவாக இருக்கும் பலரை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்**

பொலிஸாரைப் பார்த்ததும் குறித்த நபர் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடந்து கொள்வதை அவதானித்த பொலிஸார், அவரது கைரேகையை எடுத்து சோதனை செய்து பார்த்ததில், அவர் 5 வருடங்களுக்கு முன்னர் நடந்த கொலை குற்ற வழக்குடன் தொடர்புடையவர் என்பதும் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மும்பை

## தாயைக் கொன்று, உடலை ஆற்றில் வீசிய மகன்



நபர் ஒருவர் தனது தாயைக் கொன்று, உடலை ஆற்றில் வீசிய கொடூர சம்பவம் மும்பையில் இடம்பெற்றுள்ளது.

மராட்டிய மாநிலம், ராய்காட் மாவட்டத்தில், கல்பதரு பகுதியில் 74 வயதான மூதாட்டியொருவர் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நீண்ட நாள்களாக குறித்த மூதாட்டியைக் காணவில்லை என அப்பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.


இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, மூதாட்டியின் அலைபேசி சிக்னல் அவரது மகனது வீட்டுக்கு அருகில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் சந்தேகமடைந்த பொலிஸார், இது குறித்து அவரது மகனிடம் மேற்கொண்ட தீவிர விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

அண்மையில் சொத்தைப் பிரிப்பது தொடர்பாக தனக்கும் தனது தாய்க்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதனைால் ஆத்திரமடைந்து தனது தாயின் தலையை பல முறை பேஸ்போல் மட்டையால் தாக்கியதாகவும், இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும், இதனையடுத்து அவரது உடலை ராய்காட் மாவட்டத்தில் உள்ள ஆற்றில் வீசியதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ‘போர்ப்ஸ்’ இதழில் நிர்மலா சீதாராமன்



உலகளவில் மிகவும் சக்தி வாய்ந்த 100 பெண்கள் கொண்ட பட்டியலை அமெரிக்காவின் ‘போர்ப்ஸ்’ பத்திரிகை வெளியிட்டு வருகின்றது.

செல்வம், ஊடகம், தாக்கம், செல்வாக்கு ஆகிய 4 துறைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அந்தவகையில் இந்த ஆண்டுக்கான பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது.

இதில் உலக அளவில் மிகவும் சக்தி வாய்ந்த பெண்ணாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ஊர்சுலா வாண்டர் லியன் முதலிடத்தை பிடித்துள்ளார். உக்ரேன் போர், கொவிட்-19 பெருந்தொற்று காலத்தில் அவரது செல்வாக்கு மிகுந்த தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய மத்திய வங்கி தலைவர் கிறிஸ்டின் லக்ராட் இரண்டாம் இடத்தையும், அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

போர்ப்ஸ் பத்திரிகையின் இப் பெருமை மிகுந்த பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 6 பேர் இடம்பிடித்துள்ளனர். இதில் முக்கியமாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 36ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இப் பட்டியலில் இடம்பிடித்து வரும் அவர், 4ஆவது முறையாக இந்த ஆண்டும் தனது இடத்தை உறுதி செய்திருக்கிறார்.

இதைப்போல ‘எச்.சி.எல். டெக்’ தலைவர் ரோஷினி நாடார் மல்கோத்ரா 53-ஆவது இடத்தையும், ‘செபி’ தலைவர் மாதபி புரி பக் 54ஆவது இடத்தையும், இந்திய ஸ்டீல் ஆணைய தலைவர் சோமா மண்டல் 67ஆவது இடத்தையும் பிடித்துக் கொண்டுள்ளனர்.

# இன நல்லிணக்கமும் மனிதஉரிமைகளும்

## திருகோணமலை எகெட் – கரித்தாஸ் நிறுவனத்தின் தூரநோக்கான பணிகள்











அ. அச்சுதன்

திருகோணமலை எகெட் - கரித்தாஸ் நிறுவனம், திருகோணமலை மாவட்டத்தில் பௌத்த, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் மதங்களிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கட்டி எழுப்புவதில் பல வேலைத்திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், கலை நிகழ்வுகள், பல்சமய ஒன்றிய அமைப்பின் மூலம் மாதாந்த கலந்துரையாடல்கள் என்பன நடைபெற்று வருகின்றன.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு, உருவாகுவதற்கு சமய படிப்பினைகள் அடிப்படை காரணமாக அமைந்தன. 1948ஆம் ஆண்டில் ஐ.நா சபையால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான உலக சாசனம் முன்வைக்கப்படுவதற்கு, அக்காலகட்டத்தில் காணப்பட்ட தீவிர போக்குடைய கலாசார சமய ரீதியான சித்திரவதைகளே ஊன்றுகோலாக காணப்பட்டன.

இருப்பினும், தனிநபர் மற்றும் சமூக நலன் கருதி, சமய படிப்பினைகள் அண்மைக் காலங்களில் மனித உரிமைகள் சட்ட அறிஞர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஒரு நாட்டின் அதிகாரிகளால் அமல்படுத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் மனித மாண்புகளை பாதுகாத்தல், கலாசார நேர்மை போன்ற விடயங்களை அழித்தல் செயற்பாடுகள் முன்னிலையில் அவற்றை பாதுகாத்தல், பரப்புதல் போன்ற விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியது சமயங்களினதும் சமயத்தலைவர்களினதும் மகத்தான கடமையாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் சர்வமத இளையோர்களின் ஒத்துழைப்பில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில், எகெட்- கரித்தாஸ் நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் அடிகளார் தலைமையில், சமாதான நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் மு.அ.மு றிஸ்மியின் ஒழுங்குபடுத்தலில் திருகோணமலை, மூதூர், சேருவில ஆகிய பிரதேசங்களில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, திருகோணமலைக்கு அழகையும் சிறப்பையும் பெருமையையும் தருவது கோணேசர் கோவில் மான்களாகும். இவை, இப்பிரதேசத்தின் பெரும் சொத்தாகும்.

இவ்வாறானதொரு பிரதேசத்தில் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன், எகெட்- கரித்தாஸ் நிறுவனத்தால் அண்மையில் திருகோணமலை நகர சபைக்கு உட்பட்ட 'மான்கள் பூங்கா' என்று அழைக்கப்படும் கடற்கரைப் பகுதியில் சிரமதானம் இடம்பெற்றது.

எகெட் - கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இயற்கையைப் பாதுகாக்க வேண்டும், சுற்றுப் புறச்சூழலைப் பேண வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினர்.

உலகத்தைப் பொறுத்தவரையில் இயற்கையைப் பாதுகாப்பது ஓர் இனத்தின் பொறுப்பு அல்ல; ஒரு மதத்தின் பொறுப்பும் அல்ல; இது மனிதத்தின் பொறுப்பு என்பதை கூறவேண்டியுள்ளது.

அந்த வகையில், அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களுமே ஒன்று கூடி, சிரமதானத்தில் கலந்து கொண்டமை இன நல்லிணக்கத்தின் அடையாளம் ஆகும்.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் மிகக் கடினமான காலகட்டத்திலேயே வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் கடந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு எகெட் - கரித்தாஸ் நிறுவனம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதில் மிகமுக்கியமாக, வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு பயிர் கன்றுகளை வழங்குவதில் இருந்து, ஆலோசனைகள், பயிற்சிகள் போன்றவற்றை வழங்கி, அவர்களை அத்துறையின் மூலம் உயர்த்துவதற்குப் பாடுபடுகின்றது.

எகெட் கரித்தாஸ் நிறுவனம், இன நல்லின்னக்கம், சமாதானம் என்பவற்றை நிலை நிறுத்துவதற்கான செயற்பாடுகளில் ஒன்றாக, ஊடகவியலாளர்களையும் அவர்களின் திறன்விருத்தியையும் உயர்த்துவதற்கும் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

ஊடகவியலாளர்கள் மூலம் மக்களுடைய பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு முயற்சிகளை முன்னெடுக்கின்றது. உண்மையிலேயே, திருகோணமலை எகெட் - கரித்தாஸ் நிறுவனம், திருகோணமலை மாவட்டத்தில் மக்கள் நலன் சார்ந்து சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றமை சிறப்பாகும்.



# மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டவை அல்ல; பறிக்கவும் எவருக்கும் உரிமையில்லை

## நாளை சர்வதேச மனித உரிமைகள் தினம்



ஆர். நடராஜன் ஹரன்



மனிதன் ஒரு சமூகப்பிராணி என்பது சில சமூகவியலாளர்களின் கருத்து. ஆனால், தனது இனத்தைச் சார்ந்தவர்களையே காட்டுமிராண்டித்தனமாக கொடுமைப்படுத்தி, அல்லலுக்கு ஆளாக்கும் விநோத நடத்தை மனிதர்களிடம் மட்டுமேதான் காண இயலும்.

சர்வதேச மனித உரிமைகள் தினம், ஆண்டு தோறும் டிசெம்பர் 10ஆம் திகதி அனுசரிக்கப்படுகிறது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போதான சொத்து இழப்புகள், படுகொலைகள், அட்டுழியங்கள், மனிதப் பேரழிவுகள் போன்றவற்றின் பின்னர் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதே, இந்த மனித உரிமைகள் பிரகடனமாகும்.

மனிதர்கள், மனிதர்களாக வாழப் பிறந்த காரணத்தால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க முடியாத, மறுக்க முடியாத உரிமைகளை, 'மனித உரிமைகள்' என்று அழைக்கிறோம். மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல; அதுபோல், மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதும் அல்ல. எனவே, ஒருவரின் உரிமையை பறிக்க எவருக்கும் உரிமையில்லை.

1945ஆம் ஆண்டு, பெப்ரவரி 16ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் 'மனித உரிமை ஆணைக் குழு' உதயமானது. 53 நாடுகளை அங்கமாகக் கொண்ட இக்குழு, முதல் வேலையாக சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை உருவாக்குவதற்கு, அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின்படி, 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. டிசெம்பர் 10, 1948ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில், இந்தப் பிரகடனத்துக்கு 58 நாடுகள் அங்கிகாரம் வழங்கின. 1950ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி முதல், 'சர்வதேச மனித உரிமைகள் தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது.

விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் அதிஉச்சத்திலிருக்கும் காலக்கட்டத்தில் வசித்து வருகிறோம். மனித உரிமைகள் பற்றியும் ஊடக சுதந்திரம் பற்றியும், மிக அதிகமாகவே பேசி வருகிறோம். ஆனால், நாகரிகமடைந்த சில மனித மனங்கள், மிருகங்களை விட மோசமான நிலையிலேயே இருந்து வருகின்றன என்பதற்கு நாம் வாழும் உலகில் பல நிதர்சனங்களை சந்தித்து வருகிறோம். நாகரிகமும் விஞ்ஞானமும் வளரவளர மனிதர்களை வதை செய்யும் உத்திகளும் நவீனமடைந்து வரும் அவலநிலையும் தொடர்கிறது.

### உலகம் உரத்துக் கூற வேண்டிய உண்மை

உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களுக்கும் சமமான உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் கொண்டிக்கின்றனர் என்ற உண்மையைத் தான் இந்த நாளில் உலகம் உரத்து கூற வேண்டியுள்ளது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தும் வகையிலும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இந்தத் தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 'சர்வதேச மனித உரிமைகள் சாசனம்' 30 உறுப்புரைகளைக் கொண்டது. அவையாவன:

01. சமத்துவ உரிமை; 2. ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை; 3. சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை; 4. யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை; 5. சித்திரவதைக்கு, மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்; 6. சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்; 7. பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் பாதுகாப்புக்கு எல்லோரும் உரித்தானவர்கள்; 8. ஒருவரின் உரிமை மதிக்கப்படாத போது சட்ட உதவியை நாடும் உரிமை; 9. சட்டத்துக்குப் புறம்பாக ஒருவரை காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ யாருக்கும் உரிமை இல்லை; 10. நீதியான, பகிரங்கமான விசாரணைக்கான உரிமை; 11. குற்றம் சாட்டப்படுவோர், குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என நிரூபிக்க வாய்ப்பு வழங்கும் உரிமை; 12. தனிப்பட்ட அல்லது அந்தரங்க விடயத்தில் எவரும் தலையிடாமல் இருப்பதற்கான சுதந்திரம்; 13. ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், நாட்டை விட்டு வெளியேறவும், திரும்பி வரவும் உரிமை; 14. ஆபத்து காலத்தில் பிற நாட்டில் தஞ்சம் கேட்கும் உரிமை; 15. ஒவ்வொரு பிரஜைக்கும் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ற தேசிய இனத்தை மாற்றிக்கொள்ளும் உரிமை; 16. எந்த ஆணும் பெண்ணும் விரும்பினால், திருமணம் செய்துகொண்டு பாதுகாப்புடன் குடும்பம் நடத்துவதற்கான உரிமை; 17. சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை; 18. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு; 19. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எவருக்கும் உண்டு. 20. எந்த ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்ள, சங்கத்தில் உறுப்பினராக யாருக்கும் உரிமை உண்டு; 21. அரசியல் உரிமை; 22. சமூகப் பாதுகாப்புக்கும் தன் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உரிமை; 23. ஒவ்வொருவரும் விரும்பிய தொழில் செய்யவும் சம்பளம் பெறவும் உரிமை கொண்டவர்கள். ஒவ்வொருவருக்கும் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் அவற்றில் சேரும் உரிமையுமுண்டு; 24. இளைப்பாறுவதற்கும் ஓய்வெடுக்கவும் உரிமை; 25. ஒவ்வொருவரும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவக் காப்பு, அவசியமான சமூக சேவைகள் உட்பட தமது குடும்பத்தாலும், உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கு உரிமை உடையவர். 26. ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு; 27. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்குகொள்வதற்கும், கலை மற்றும் அறிவியல் முன்னேற்றத்திலும், அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு; 28. மனித உரிமைகளை உறுதிசெய்யும் சமூக அமைப்புகளில் பங்குபற்றும் உரிமை. 29. ஒவ்வொருவரும் பிறரது உரிமையை மதிக்க வேண்டும். 30. இந்தப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள எந்த ஓர் உரிமையையும் ஒருவர் பெறுவதற்கு தடையாக இருக்க எவருக்கும் உரிமை கிடையாது.

1979லிருந்து பல நாடுகள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக கண்காணிக்க தொடங்கின. 1995 இல் எல் சல்வடோர், கம்போடியா, ஹெயிட்டி, ருவண்டா, புரூண்டி ஆகிய நாடுகளில் ஐ.நா தன் கவனத்தைச் செலுத்தியது. 1993 ஜூன் 14 இல் வியட்னாமில் நடந்த இரண்டாவது மனித உரிமைகள் மாநாடு, பெண்கள் உரிமைகள் பற்றிக் கவனம் செலுத்தியது.

இலங்கையில் யுத்த நிலையின் போது, உரிமை மீறல்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்தது. இப்பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில், இலங்கை ஐ.நாவில் அங்கம் பெற்றிருக்கவில்லை.

ஆனால், ஆங்கிலேய காலனித்துவத்திடமிருந்து இலங்கை அதே ஆண்டில் தான் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டது. நாம் ஏற்கெனவே பார்த்த சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் சரத்தில் எவற்றை இலங்கை தீவில் வாழும் மக்களுக்கு சாதகமாக இலங்கை ஆட்சியாளர் பாவித்துள்ளார்கள்?

உண்மையை கூறுவதானால், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அத்தனை சரத்துகளையும் இலங்கை மீறியுள்ளதற்கான ஆதாரங்கள் பலதை உதாரணப்படுத்தலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையிலே குடியுரிமை, வாக்குரிமை பற்றி எடுத்துக் கூறும் 21ஆம் உறுப்புரையை மீறியது. அதாவது, மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து, 1956 ஆம் ஆண்டு சிங்களச்சட்டம் மூலம் சரத்து 2, 3 மீறப்பட்டன. 1956 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இனக் கலவரங்கள் மூலம் சரத்து 3, 5, 12, 17 ஆகியவை மீறப்பட்டுள்ளன. நூறு ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களை 1964 ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் நாடு கடத்தியதன் மூலம் சரத்து 4, 15, 23 ஆகியவை மீறப்பட்டுள்ளன.

தமிழ் மாணவர்கள் சம கல்வி மறுக்கப்பட்டு தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சாரம் 26 மீறப்பட்டுள்ளது. தொடர்ச்சியான அவசரகால நிலையுடன் கூடிய பயங்கரவாதச் சட்டம் மூலம் சரத்துகள் 2, 3, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 மீறப்பட்டுள்ளன. இவ்வாறு அடுக்கிக் கொண்டு போகலாம்.

இந்நிலை யுத்தகாலத்தில் அதிகமாக இருந்தது போன்று, இனப்படுகொலை, சிறுபான்மையினர் ஒதுக்கப்படல், கல்வி, வேலை வாய்ப்புகளில் சமத்துவமற்ற நிலை, ஆதாரம் இல்லாமல் கைது செய்தல், காணாமல் போதல், தடுப்புக்காவல் தண்டனைகள், சிறைக்குள் படுகொலை ஆகிய மனித உரிமை மீறல்கள் இனிமேலும் நடைபெறாதவாறு ஐ.நா சட்டரீதியான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தின் உறுப்புரை 13இல் கூறப்பட்டுள்ளது போன்று, ஒவ்வொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. ஆனால், நம் நாட்டில் நடப்பதென்ன?

அண்மைக் காலமாக நாட்டில் மீண்டும் உருவெ டுத்துள்ள, பாலியல் துஷ்பிரயோகங்கள், கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் மேற்கூறப்பட்ட மனித உரிமைப் பிரகடனத்தையே கேலிக்குரியதாக்குகின்றனவே?

மனிதப் படுகொலைகள், பாலியல் பலாத்காரம், மனித உரிமை மீறல்கள் முதலானவற்றுக்கு எதிராகவே மனித உரிமைகள் பிரகடனம் ஐ.நாவால் கொண்டுவரப்பட்டது.

மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவதை விட, மனித உரிமைகளைப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



உலகக் கிண்ணம்: இன்று ஆரம்பிக்கும் காலிறுதிப் போட்டிகள்

# பிரேஸிலை வீழ்த்துமா குரோஷியா?

## நெதர்லாந்தைத் தாண்டுமா ஆர்ஜென்டினா?

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பிக்கவுள்ளன.

அந்தவகையில், இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் பிரேஸிலை குரோஷியா எதிர்கொள்ளவுள்ளது.

இப்போட்டியில் பெரும்பாலும் பிரேஸிலே வெல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதும் லூகா மோட்ரிச், மட்டியோ கொவாசிச்சை உள்ளடக்கிய குரோஷியாவானது பிரேஸிலுக்கு பலத்த சவாலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் நெதர்லாந்தை ஆர்ஜென்டினா எதிர்கொள்கிறது. நெதர்லாந்தே அதிக வாய்ப்புள்ள அணியாகக் காணப்படுகின்றபோதும், லியனல் மெஸ்ஸி மீண்டும் கைகொடுத்தால் ஆர்ஜென்டினா இன்னும் ஒரு சுற்று முன்னேறும்.

இந்நிலையில், நாளை இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டியில் மொரோக்கோவை போர்த்துக்கல் எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி கடும் போட்டி மிக்கதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நாளை மறுதினம் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள இங்கிலாந்தை நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது. கிட்டத்தட்ட ஏறத்தாழ இரண்டும் சமபலமுள்ளவையாகக் காணப்படுகின்ற நிலையில் இரண்டு அணிகளின் பின்களங்களே வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றது.

எல்.பி.எல்:

## தம்புள்ள ஓறாவை வென்ற கொழும்பு ஸ்டார்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கில், ஹம்பந்தோட்டையில் நேற்று நடைபெற்ற தம்புள்ள ஓறாவுடனான போட்டியில் கொழும்பு ஸ்டார்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டார்ஸின் அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்டார்ஸ், நிரோஷன் டிக்வெல்லவின் 62 (41) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், லஹிரு குமார 4-0-36-4, தரிந்து ரத்னாயக்க 3-0-20-1, சிகண்டர் ராசா 4-0-31-1, லஹிரு மதுஷங்க 2-0-17-1, நூர் அஹ்மட் 3-0-23-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஓறா, 7 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று ஒன்பத் ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில், டொம் அபெல் 33 (22), தசுன் ஷானக ஆட்டமிழக்காமல் 31 (20), ஜோர்டான் கொக்ஸ் 29 (15) ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில், டொமினிக் ட்ரேக்ஸ் 4-0-35-2, சுரங்க லக்மால் 4-0-29-2, கரிம் ஜனட் 3-0-30-2, நவீன்-உல்-ஹக் 4-0-22-1, சரித் அஸலங்க 1-0-3-0, ரவி போப்பாரா1-0-7-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக நிரோஷன் டிக்வெல்ல தெரிவானார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கோல் கிளாடியேட்டர்ஸுடனான போட்டியில் கண்டி பல்கொன்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ் மொவின் சுபசிங்கவின் 40 (38), இமாட் வசீமின் 34 (39) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், கார்லோஸ் பிறத்வெய்ட் 4-1-14-4, ஸஹூர் கான் 4-0-26-2, இசுரு உதான 4-0-19-1, வனிடு ஹஸரங்க 4-0-24-1, அஷியன் டானியல் 2-0-10-0, பேபியன் அலென் 2-0-16-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 122 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பல்கொன்ஸ், கமிந்து மெண்டிஸின் 44 (34) ஓட்டங்களோடு 15 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

பந்துவீச்சில், நுவான் துஷார 3-0-18-1, இஃப்திஹார் அஹ்மட் 1-0-7-1, இமாட் வஸீம் 3-0-18-0, வஹாப் றியாஸ் 3-1-22-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



இந்தியாவுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்

இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியை வென்றமையையடுத்தே, இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 271/7 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 100 (83), மஹமதுல்லா 77 (96) ஓட்டங்கள். பந்துவீச்சு: வொஷிங்டன் சுந்தர் 3/37, உம்ரான் மலிக் 2/58, மொஹமட் சிராஜ் 2/73)

இந்தியா: 266/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 82 (102), அக்ஸர் பட்டேல் 56 (56), றோஹித் ஷர்மா ஆ.இ 51 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: எபொடொட் ஹொஸைன் 3/45, ஷகிப் அல் ஹஸன் 2/39, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/46, மகமதுல்லா 1/33, முஸ்தபிசூர் ரஹ்மான் 1/43)

போட்டியின் நாயகன்: மெஹிடி ஹஸன் மிராஸ்

இந்நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது, சட்டோகிராமில் நாளை காலை 11.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

தேசிய மட்ட 5,000 மீற்றர் போட்டியில்

## முதலிடம் பெற்ற முழங்காவில் மாணவன் கீரன்

■ நடராசா கிருஸ்ணகுமார்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில், கொழும்பு சுகததாஸ அரங்கில் அண்மையில் நடைபெற்ற ஆண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய மாணவன் சுமன் கீரன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.



வட கொரியா

# ‘சீரீஸ்’ பார்த்த சிறுவர்களுக்கு மரண தண்டனை

சீரிஸ் பார்த்த சிறுவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தலைமையிலான ஆட்சி நடைபெறும் வடகொரியாவில், பொதுமக்கள் இணையதளம், சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது அங்கு சினிமா, வெப் சீரீஸ்களைப் பார்ப்பதற்கும், விற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு, குறிப்பிட்ட சில தொலைக்காட்சி அலைவரிசைகளை மாத்திரமே பார்வையிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், இச் சட்டத்தை மீறுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 16, 17 வயதான இரு சிறுவர்கள் ஒக்டோபர் மாதம் கொரியன் சீரீஸ் மற்றும் ஹொலிவுட் திரைப்படங்களைப் பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.





இந்நிலையில் குறித்த சிறுவர்களுக்கு மரண தண்டனை விதித்து வடகொரிய அரசு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அண்மையில் பொதுமக்கள் முன்னிலையில் அச்சிறுவர்கள் நகரத்தில் உள்ள ஒரு விமான ஓடுதளத்தில் தூக்கிலிடப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடகொரியாவின் இச்செயலானது உலகநாடுகள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இரகசிய காவல் நிலையங்கள் மூலம்

## உலகை கண்காணிக்கும் சீனா



உலகெங்கிலும் ‘காவல் சேவை மையங்கள்’ என்ற பெயரில் சீனா இரகசிய காவல்துறையை நடத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்பெயினில் இயங்கிவரும் ‘Safeguard Defenders’ என்ற அமைப்பே இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அந்தவவையில் உலகின் 53 நாடுகளில் சுமார் 102 காவல் நிலையங்களை சீனா இரகசியமாக நடத்தி வருவதாகவும், சீனாவின் இத் திட்டத்திற்கு சில நாடுகளும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாடுகளில் வசிக்கும் சீனப் பிரஜைகளை நாடு திரும்பும்படி குறித்த காவல் நிலையங்கள் வற்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இச்செய்தியை மறுத்த சீன தூதரகம், சீனக் குடிமக்கள் தங்கள் ஓட்டுநர் உரிமங்களைப் புதுப்பிக்க இந்த நிலையங்கள் உதவுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், சீன குடிமக்களில் பலர் கொவிட் -19 பெருந்தொற்றுநோய் காரணமாக சீனாவுக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளதாகவும், அவர்களுக்கு உள்ளூர் தன்னார்வலர்கள் உதவுவதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

ஆனால், புதிதாக ஆவணப்படுத்தப்பட்ட நிலையங்களில் பெரும்பாலானவை, கொரோனா தொற்றுநோய் தொடங்குவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, 2016 இல் தொடங்கப்பட்டதாக குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது.



அவுஸ்திரேலியா

## பிரம்மிக்க வைக்கும் தொலைநோக்கி மையம்

மனிதனை விண்ணுக்கு அனுப்பும் முயற்சியில் அமெரிக்க, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு பற்பல ஆராய்ச்சிகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் 16 நாடுகள் இணைந்து அவுஸ்திரேலியாவில் பிரம்மாண்டமான தொலைநோக்கி மையமொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அந்தவகையில் 1,31,000 அன்டனாக்கள் தொகுப்பாக இணைக்கப்பட்டு, இப் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், இனிவரும் காலங்களில் விண்வெளியில் இருந்து புதிய தகவல்கள், கண்டுபிடிப்புகளை வெளி உலகத்துக்குக் கொண்டுவர முடியும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.




அமெரிக்கா

## சிறுவர்களை குறிவைக்கும் கொரோனா

அமெரிக்காவில் அமைக்காலமாக கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக, கலிபோர்னியா மற்றும் நியூமெக்ஸிகோவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இது குறித்த, ‘அமெரிக்கன் அகாடமி ஆஃப் பீடியாட்ரிக்ஸ்’ (ஏஏபி) மற்றும் சிறுவர் மருத்துவமனை சங்கம் வழங்கியுள்ள அறிக்கையில், ‘கடந்த நான்கு வாரங்களில் சுமார் 1,14,000 சிறுவர்கள் கொரோனா வரைஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2020ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியதில் இருந்து 15 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

## பொதுவெளியில் தூக்கு தண்டனை

ஆப்கானிஸ்தானில் கொலை வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு, தலிபான் அரசு நேற்றைய தினம் (08) பொதுவெளியில் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர், 2017ஆம் ஆண்டு ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தமைக்காகவே இம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய தலிபான்கள், அதன்பின்னர் முதல்முறையாக பொதுவெளியில் தூக்கு தண்டனை நிறைவேற்றியுள்ளனர்.

இந்நிலையில் இக்கொலை வழக்கானது 3 நீதிமன்றங்களால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், தெற்கு, காந்தஹார் மாகாணத்தைச் சேர்ந்த தலிபானின் தலைவரால் இத் தீர்ப்பு அங்கிகரிக்கப்பட்டதாகவும் தலிபான்



செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 1996-2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்றபோது, குற்றம் செய்தவர்களுக்கு பொதுவெளியில் வைத்தே அடித்தல், கல்லெறிதல், கசையடி வழங்குதல், மரணதண்டனை உள்ளிட்ட தண்டனைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் அக்காலகட்டத்தில் இடம்பெற்ற தலிபான்களின் கொடூர ஆட்சி, தற்போது மீண்டும் இடம்பெற்று வருவதாக மனித உரிமைகள் அமைப்புகள் பல குற்றம் சுமத்தியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 09 டிசெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.